விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 230 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி 21 புதன்கிழமை (06.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## பழிவாங்கும் செயற்பாட்டில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது

### முன்னாள் ஜனாதிபதி மகிந்த



(கொழும்பு)

அரசாங்கம் பழிவாங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து 15ஆம் பக்கம் பார்க்க

## சட்டச் சிக்கல் நீக்கப்படும்வரை மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது

### தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்பாளர்

(மட்டக்களப்பு)

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக எழுந்துள்ள சட்டச் சிக்கல் நீக்கப்படும்வரை மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியாது என தேர்தல் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் சமன் ஶ்ரீரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித் 15ஆம் பக்கம் பார்க்க



# மக்கள் பார்வைக்கு சான்றுப் பொருட்கள்

- உறவுகள் உட்பட சுமார் 200 பேர் வரை பார்வையிட்டிருந்தனர்.
- எவரும் சான்றுப் பொருட்களை அடையாளம் காட்டவில்லை.
- பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டிருந்ததோடு ஊடகங்களுக்கும் தடைவிதிப்பு.

(15ஆம் பக்கம் பார்க்க)

## செம்மணியில் நேற்றும் 'ஸ்கான்' நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழிகள் காணப்படும் இடத்துக்கு அருகில் மேலும் புதைகுழிகள் உள்ளனவா என்பதனை ஆராயும் நோக்கில் முன்னெடுக்கப்படும் 'ஸ்கான்' பரிசோதனை நடவடிக்கை நேற்றும் முன்னெடுக்கப்பட்டது.

காலை 8 மணியிலிருந்து 15ஆம் பக்கம் பார்க்க

## தேசபந்து தென்னகோன் பதவியிலிருந்து நீக்கம்

### சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

(கொழும்பு)

பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னகோனை நீக்குவதற்கான யோசனை பாராளுமன்றில் 177 15ஆம் பக்கம் பார்க்க



## 6 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் செம்மணியில் நேற்று அடையாளம்



(யாழ்ப்பாணம்)

செம்மணி மனித புதைகுழியில் புதிதாக 6 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

செம்மணி புதைகுழி அகழ்வின் இரண்டாம் கட்டத்தின் 31ஆவது நாள் அகழ்வு யாழ்ப்பாண நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மேற்பார்வையில் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய அகழ்வில் புதிதாக 15ஆம் பக்கம் பார்க்க

## சங்குப்பிட்டியில் கடலுக்குள் பாய்ந்து கார் விபத்து



15ஆம் பக்கம் பார்க்க

## சான்றுப் பொருட்களை காட்சிப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

செம்மணி மனிதப் புதைகுழியில் மீட்கப்படும் சான்றுப் பொருட்களை தொடர்ந்து காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டத்தரணி ரனிதா ஞானராஜா 15ஆம் பக்கம் பார்க்க

## கிளிநொச்சி மாவட்ட அரச அதிபராக

### எஸ்.முரளிதரன் பதவி உயர்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராக எஸ்.முரளிதரன் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இதுவரை காலமும் கிளிநொச்சி மாவட்டத்தின் பதில் அரசாங்க அதிபராக எஸ். முரளிதரன் 15ஆம் பக்கம் பார்க்க

## மூன்று வாரங்களில் ஸ்கான் பரிசோதனைகள் அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 3 வாரங்களில் செம்மணி மனிதப் புதைகுழியில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனை தொடர்பான இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என சட்டத்தரணி ரனிதா ஞானராஜா தெரிவித்தார்.


செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழி 15ஆம் பக்கம் பார்க்க

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## DR.கனகசபை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, பண்டாரவளை, மாத்தளை வைத்தியசாலைகளில் கடமையாற்றி அதனைத் தொடர்ந்து லைபீரியாவில் பலகாலம் சேவை புரிந்து அங்கு Ebola தொற்று நோய்காலத்தில் தனது உயிரையும் துச்சமாக மதித்து சேவையாற்றியமைக்காக அந்நாட்டு ஜனாதிபதியினால் கௌரவிக்கப்பட்டு தனது ஓய்வுக் காலத்தை இல.54, இராசாவின் தோட்டம் யாழ்ப்பாணத்தில் வசித்த வந்தவருமான Dr.கனகசபை அவர்கள் கடந்த (02.08.2025) சனிக்கிழமை அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற இராஜேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் அருந்ததி (USA), உமாசங்கர் (Pastor - USA), உதயசங்கர் (Doctor - USA) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரொனி அவர்களின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற வர்களான சந்திராதேவி, குணரத்தினம், அரியரத்தினம், சூரியதாஸ் மற்றும் கமலாதேவி (வவுனியா), ஜீவானந்தம்(கனடா), விமலாதேவி (கொழும்பு), விமலதர்ஸ் (டென்மார்க்), உமாதேவி (சென்னை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது வதிவிடத்தில் இன்று (06.08.2025) புதன்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2025) வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இல.54, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்.

தகவல் : குடும்பத்தினர்
077 315 5589, 077 153 1045

(4975)

# மரண அறிவித்தல்

## திருமதி திலகவதி கந்தசாமி

ஏழாலை கிழக்கு, ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திலகவதி கந்தசாமி அவர்கள் (04.08.2025) திங்கட்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் கவுணாவத்தை வைரவர் கோவிலடியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை கந்தசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதியரின் ஏக புதல்வியும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - நாகமுத்து தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற குகன் மற்றும் மாலதி, சபேசன், உஷாசுதாநிதி (உஷா), காலஞ்சென்ற உதயபானு (சேகர்) ஆகியோரின் தாயாரும் அகல்யா, கிருஷ்ணதாசன், நந்தினி, மகாதேவன், சுதர்சினி ஆகியோரின் மாமியும் வினோத், சதீஸ், அஜித்தா, சவிதா, ஆரூரன், மயூரன், ஆதிரை, அனுஷன், ஆரணி, சருண்யா, ஜோசிகா, லேணுகா ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் கியாறன், லிவ்யா ஆகியோரின் பூட்டியும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, தங்கத்துரை, மார்க்கண்டு, இராசதுரை ஆகியோரின் பாசமிகு தங்கையும் காலஞ்சென்றவர்களான கதிரேசர்பிள்ளை, கதிராசிப்பிள்ளை, கணபதிப்பிள்ளை, சின்னத்தங்கச்சி, அருந்தவம் மற்றும் சோதிமயில் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (07.08.2025) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காடாகடம்பை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்

021 205 9406

(4976)



மண்ணிற்கு 26.06.1933

விண்ணிற்கு 04.08.2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்; சுயாதீன விசாரணை நடத்த கோரிக்கை

## அவுஸ்திரேலிய பாராளுமன்றில் ஒலித்த செனட் உறுப்பினர்களின் குரல்கள்

**(கன்பெரா) ..........................................**

**யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணி மனிதப் புதைகுழிகளிலிருந்து வெளியாகும் தகவல்களைத் தொடர்ந்து, நீதி மற்றும் பொறுப்புக் கூறலுக்காக அவுஸ்திரேலிய செனட் உறுப் பினர்கள், அழைப்பு விடுத்துள்ளதாக் தகவல் வெளியாகியுள்ளது.**



அவுஸ்திரேலியா பாராளு மன்றத்தில் இது தொடர்பான அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செம்மணியில் மேற்கொள் ளப்படும் தடயவியல் அகழ்வு களின் போது, சிறுவர்களின் எச்சங்கள், அவர்களின் பாட சாலைப் பைகள் உட்பட அட் டூழியங்களுக்கான ஆதாரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த கண்டெடுப்புக்கள், சர்வதேச சமூகத்தை அதிர்ச்சிக்குள்ளாக் கியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போதும் அதற்குப் பிற கும் நடந்ததாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படுகொலை குறி த்து சுயாதீன விசாரணை நடத்த வேண்டும் என்ற அவசர கோரிக்கைகளை மீண்டும் எழு ப்பியுள்ளது என்று அவுஸ்தி ரேலிய செனட் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், இந்த விட யத்தில், அவுஸ்திரேலிய அரசு, உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று செனட்டர்கள், அவுஸ்திரேலிய பாராளுமன் றத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், இலங்கையில் உள்ள செம்மணி மற்றும் பிற புதைகுழிகள் குறித்து சர்வதேச அளவில் கண்காணிக்கப்படும் தடயவியல் விசாரணைக்கு உதவ வேண்டும் என வேண் டுகோள் விடுத்துள்ளனர்.

ஐக்கிய நாடுகளின் இல ங்கை பொறுப்புக்கூறல் திட்ட த்தின் நீடிப்பை ஆதரிக்க வேண் டும். போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்களுக்காக நம்பகத்தன்மையுடன் குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக இலக்கு வைக்கப்பட்ட தடைக ளைச் செயற்படுத்த வேண்டும்.

அதேநேரம் ஐக்கிய நாடு களின் மனித உரிமைகள் பேர வையின் ஒரு பார்வையாளராக, இலங்கைக்கு எதிராக ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபைக்கு அனுப்பும் தீர்மானங்களை ஆதரிக்க வேண் டும் என்று செனட்டர்கள் கோரி யுள்ளனர்.

இந்தநிலையில் தமிழ் புலம் பெயர்ந்தோர், அவுஸ் திரேலிய சமூகத்துக்கு நிறை யவே பங்களித்துள்ளனர். எனவே, அவர்களின் நீதிக் கான கோரிக்கைகள் செயற் படுத்தப்படுவதை உறுதி செய்ய வேண்டியது அவுஸ்தி ரேலியாவின் பொறுப்பு என்று அந்த நாட்டு செனட்டர் கள் அவுஸ்திரேலிய அரசை வலியுறுத் தியுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் இலங்கை விஜயம்

அவுஸ்திரேலிய ஆளுநர் நாயகம் சமந்தா ஜாய் மோஸ்டின் இன்று இலங்கைக்கு உத்தி யோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.


இவ்விஜயத்தின் போது, ஆளுநர் நாயகம், ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க மற்றும் பிரதமரும், கலாநிதியுமான ஹரிணி அமரசூரிய ஆகியோ ருடன் இருதரப்பு கலந்துரை யாடல்களில் ஈடுபடுவார்.

இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதையும், இரு நாடுகளின் பரஸ்பர நன் மைக்காக தற்போதுள்ள ஒத்து ழைப்புப் பகுதிகளை விரிவுப டுத்துவதற்கான வாய்ப்புகளை ஆராய்வதையும் இவ்விஜயம் நோக்கமாகக் கொண்டுள் ளது. (நி)

லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(4963)
UK-1350, Australia-2050, Canada-2550, India-1490, Germany-1990, Italy-2250, Swiss-2480, France-2180
WESTERN UNION WU MoneyGram. Ria
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு.
தொடர்புகளுக்கு
077 839 3974, 076 889 1308

# மரண அறிவித்தல்

தோற்றம் 26 - 03 - 1948



மறைவு 05 - 08 - 2025

## தாமோதரம்பிள்ளை மகாதேவன்

யாழ் உடுப்பிட்டி தெற்கு பண்டகையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை மகாதேவன் (ஓய்வுநிலை ஆசிரியர்-யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி) அவர்கள் நேற்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளை - பொன்னம்மா தம்பதியர்களின் மகனும், தேவரஞ்சனா அவர்களின் அன்புக் கணவரும் மகாலிங்கம் அவர்களின் சகோதரரும் அசோக்குமார் (ஆசிரியர்-யா/விக்னேஸ்வராக் கல்லூரி), யசோதினி (ஆசிரியை -யாழ்/இடைக்காடு மகாவித்தியாலயம்) ஆகியோரது அன்புத் தந்தையும் லக்ஷ்மிவாசன் (பொறியியலாளர் RDA), யசோதா (ஆசிரியை - யாழ்/ஆழியவளை சி.சி.த.க) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பானுஜன், ஹர்மிசா, நிக்சன், தேயோன் ஆகியோரது பாசமிகு பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப 2.30 மணியளவில் வல்வை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 [illegible]

(C-3584)

# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்




திருமதி.

## ரேணுகா ரவிகுமார் (ஆசிரியர்)

(SLTS - I, Sci.Trained)

### சேவை விபரம்

| | |
|---|---|
| 01. யா/கரணவாய் மகா வித்தியாலயம் | (17.08.1988 – 30.06.1993) |
| 03. யா/ ஆழியவளை சீ.சீ.த.க. பாடசாலை | (01.07.1993 – 08.01.1995) |
| 04. யா/ நாகர் கோவில் மகா வித்தியாலயம் | (09.01.1995 – 31.12.1997) |
| 05. யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | ( 01.01.1998 – 18.01.1998) |
| 06. யா/ஞானசாரியார் கல்லூரி | ( 19.01.1998 – 31.12.1999) |
| 07. யா/அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் | (01.01.2000 – 09.05.2010) |
| 08. யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி | ( 10.05.2010 – 15.01.2019) |
| 09. யா/தேவரையாளி இந்துக்கல்லூரி | (16.01.2019 – 05.08.2025) |

06.08.2025

Happy Birthday

எமது பாடசாலையில் ஆறு வருடங்கள் ஆசிரியராக கடமையாற்றி 05.08.2025 முதல் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர் அவர்களது ஓய்வுக் காலம் சிறக்கவும் நீடூழி காலம் வாழவும் வாழ்த்துகின்றோம்.

(1412)

வாழ்த்துவோர்- பணியாளர் நலன்புரிச்சங்கம், யா/தேவரையாளி இந்துக் கல்லூரி–கரவெட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண விளையாட்டுப் போட்டி யாழ்.மாவட்டம் முதலாமிடம்



2025 ஆம் ஆண்டுக்கான வடமாகாண விளையாட்டு விழாவில் யாழ்.மாவட்டம் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் வவுனியா ஓமந்தை விளையாட்டரங்கில் கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் வடமாகாண விளையாட்டு விழாவின் இறுதி விளையாட்டுக்கள் நடைபெற்று முடிந்திருந்தன.

இந்நிலையில் நடைபெற்ற அனைத்து விளையாட்டு நிகழ்வுகளிலும் இறுதி முடிவாக மாவட்டங்கள் பெற்றுக்கொண்ட பதக்கங்களின் அடிப்படையில் யாழ்ப்பாண மாவட்ட அணியினர் முதலாமிடத்தையும் முல்லைத்தீவு மாவட்ட அணியினர் 2 ஆம் இடத்தையும், வவுனியா மாவட்ட அணியினர் 3 ஆம் இடத்தையும், மன்னார் மாவட்ட அணியினர் 4 ஆம் இடத்தையும் தமதாக்கிக் கொண்டதோடு 5 ஆம் இடத்தை கிளிநொச்சி மாவட்ட அணியினர் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. (3)

# உலக டெஸ்ட் புள்ளிப்பட்டியலில் இந்திய அணி முன்னேற்றம்




இந்தியா- இங்கிலாந்து இடையிலான 5ஆவது டெஸ்ட் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்றது. பரபரப்பான இன்றைய ஆட்டத்தில் இந்தியா 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது. இதன்மூலம் 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 2-2 என சமனில் முடிந்தது.

கடைசி டெஸ்ட் போட்டியில் வென்றதன் மூலம் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் 28 புள்ளிகளுடன் இந்தியா 3 ஆவது இடத்திற்கு முன்னேறியது.

இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் மெதுவாக பந்துவீசியதற்காக இங்கிலாந்து அணிக்கு 2 புள்ளிகள் குறைக்கப்பட்டது. இதனால் 26 புள்ளிகளுடன் இங்கிலாந்து அணி 4 ஆவது இடத்தில் உள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் 36 புள்ளிகளுடன் அஸ்திரேலியா அணி முதல் இடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (3)



103 ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் போட்டியில் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ். மிதுன்ராஜ் ஆடவருக்கான குண்டெறிதல் போட்டியில் 16.02 மீற்றர் தூரம் எறிந்து தங்கப் பதக்கத்தையும் ஆடவருக்கான பரிதி வட்டம் எறிதல் போட்டியில் 47.91 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும் சுவீகரித்துக் கொண்டார்.






### லண்டன் ஓவல் டெஸ்டில்

# தொடரை சமன் செய்து இந்தியா திரில் வெற்றி



இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்தாவதும் இறுதியுமான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதனையடுத்து இங்கிலாந்து அணி தமது முதலாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய நிலையில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 247 ஓட்டங்களைப் பெற்றது.

இதற்கமைய 23 ஓட்டங்கள் பின் தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இந்திய அணி யசஸ்வி ஜெய்ஸ்வாலின் சதத்தின் உதவியுடன் 396 ஓட்டங்களைக் குவித்தது.

இந்தநிலையில் இங்கிலாந்து அணிக்கு 374 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.


இதன்படி வெற்றி இலக்கை நோக்கித் தமது இரண்டாவது இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் 367 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியைத் தழுவியது.

இதற்கமைய 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் 2-2 என்ற அடிப்படையில் சமநிலையில் நிறைவடைந்துள்ளது. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் விருது பெறும் ஆசான் குணசீலன்

# ஆசிரியத்துவத்தின் ஓர் அடையாளம்



யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டு தோறும் வழங்கி வரும் உயரிய யாழ் விருதை உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு வழங்கிக் கௌரவிப்பது சமூக மட்டத்தில் பெரும் மகிழ்வையும் நிறைவையும் ஏற்படுத்தியுள்ளது.

மக்கள் பணி செய்கின்ற மேன்மையாளர்களைக் கௌரவிக்கும் முகமாக யாழ்ப்பாண மாநகரசபையின் சைவ சமய விவகாரக் குழு ஆண்டு தோறும் யாழ் விருதை வழங்கிக் கௌரவித்து வருகிறது.

இதனடிப்படையில் 2025 ஆம் ஆண்டுக்கான விருது, உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்களுக்கு வழங்குவதென யாழ்ப்பாணம் மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழு ஏக மனதாக தீர்மானித்துள்ளது.

சைவ சமய விவகாரக் குழு சமய, சமூக, மருத்துவ பணிகளுக்காக புலமை சார்ந்தவர்களுக்கு ஏலவே யாழ் விருதை வழங்கியிருந்தாலும் கல்வித் துறைக்காக சிறப்பித்து வழங்கப்படுகின்ற முதலாவது யாழ் விருது இதுவென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

நம் மண்ணில் இருந்து மாணவர்களின் கல்விக்காக மிக நீண்ட காலம் பெரும் பணியாற்றி வரும் உயிரியல் ஆசான் சின்னத்தம்பி குணசீலன் அவர்கள் வட மராட்சி கரவெட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி-சிவகாமி தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தனது தாயார் கற்பித்த உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும் நெல்லியடி மகா வித்தியாலயத்தில் இடைநிலை, உயர்தரக் கல்வியையும் கற்று யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குத் தெரிவானார்.

விஞ்ஞானப் பட்டப் படிப்பை நிறைவு செய்த அவர் வல்வெட்டித்துறை சிதம்பராக் கல்லூரி, மற்றும் பருத்தித்துறை மெதடிஸ்த மிசன் உயர்தரப் பெண்கள் பாடசாலையில் ஆசிரியராக சிறிது காலம் பணியாற்றினார். பின்னர் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் விஞ்ஞானத் துறை விரிவுரையாளராகப் பதவியேற்றார்.

அதேவேளை உயிரியல் பாடத்தை தனியார் கல்வி நிறுவனங்கள் மூலம் மாணவர்களுக்குக் கற்பித்தார்.

ஆசான் குணசீலன் அவர்கள் எங்கள் மருத்துவ பீட மாணவர்களையும் விஞ்ஞானத் துறை மாணவர்களையும் உருவாக்கிய சிற்பி. மாணவர்களின் நன்மதிப்பிற்குரிய அவர், அப்பளுக்கற்ற ஆசான். ஆசிரியத்துவம் எப்படியாக இருக்க வேண்டும் என்பதற்கான அடையாளம் அவர்.

இன்று, நம் மத்தியிலும் புலம்பெயர் நாடுகளிலும் இருக்கக்கூடிய மருத்துவர்கள் மற்றும் விஞ்ஞானத் துறை சார்ந்தவர்கள் ஆசான் குணசீலனின் மாணவர்கள் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

நம் மண்ணில் போர் மேகம் சூழ்ந்த போதிலும் ஆசான் குணசீலன் அவர்கள் எங்கள் மாணவர்களின் கல்விக்காக இம் மண்ணில் இருந்து ஆற்றிய பெரும்பணியை மறந்துவிடமுடியாது. அவரின் கல்விப் பணி எங்கள் பெரும் சொத்தாகிய கல்விக்கு எந்தக் குந்தகமும் ஏற்படாமல் பாதுகாத்தது என்பதை நம் தமிழ்ச் சமூகம் ஒருபோதும் மறந்துவிடாது.

மாணவர்கள் மீது அளவு கடந்த அன்பு கொண்ட அவர் மாணவர்களின் குடும்ப நிலைகளைக் கருத்தில் கொண்டு உதவி தேவைப்பட்ட அத்துணை மாணவர்களும் உயர் கல்வி கற்பதற்குப் பேருதவி புரிந்தவர்.

கற்பிக்கும் ஆற்றல், பண்புடமை, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, நேர்கொண்ட பார்வை என்ற உயரிய விழுமியங்களைத் தன் வாழ்வின் அணிகலனாகக் கொண்டவர்.

அவரிடம் கற்றுப் புலம்பெயர் நாடுகளில் உள்ள மாணவர்கள் அவரைத் தாங்கள் வாழும் நாட்டிற்கு அழைத்து தங்கள் குருவுக்கு கௌரவம் செய்தனரெனில், அவர் மீது மாணவர்கள் கொண்டிருந்த பற்றும் பாசமும் எத்துணை உயர்வானதென்பதை நாம் உணர முடியும்.

2017 ஆம் ஆண்டில் கனடாவுக்கும் 2018 ஆம் ஆண்டில் இலண்டனுக்கும் 2019 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவுக்கும் அழைத்து அவருக்கு விழா எடுத்து அவரது மாணவர்கள் மகிழ்ந்தனர்.

இதற்கும் மேலாக, வடமராட்சி பிரதேச மருத்துவர்களின் நிதிப்பங்களிப்புடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட வைத்தியர்களின் ஓய்வு அறை மற்றும் ஊழியர்களின் சிற்றுண்டிச்சாலைக் கட்டடத்திற்கான அடிக்கல்லை தங்கள் உயிரியல் ஆசான்களான திரு.சி.குணசீலன், திரு.த.தம்பிராசா ஆகியவர்கள் மூலம் நாட்டிவித்ததுடன் அந்தக் கட்டடத்தை அவர்கள் மூலம் திறந்து வைத்து அதனைக் கல்லில் பொறித்துக் கட்டடத்தில் பதித்து பெருமையடைந்தனர்.

இவ்வாறாக தனது வாழ்வை மாணவர் சமூகத்திற்கு அர்ப்பணித்த ஆசான் குணசீலன் அவர்களின் கல்விப் பணி, சமூகப்பணி மற்றும் ஆசிரியத்துவம் ஆகியவற்றிற்கு கௌரவம் அளிக்கும் அங்கீகாரமாக அமையும் யாழ் விருது அவரின் கரங்களில் சேர்வதால் அவ் விருது மேலும் பெருமை பெறுகிறது.

– விதுரன்

# இராசிபலன்

06.08.2025
ஆடி 21, புதன்கிழமை
துவாதசி பிற்பகல் 1.56 மணிவரை

மூலம் பிற்பகல்-1.34 மணிவரை
சுப நேரம் 4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்: ரோகிணி, மிருகசீரிடம்

வளவன்




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, பயணங்களால் பலனுண்டு.




எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர், உடல் நலன் சீராகி உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும்.




ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.




வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பிரபலமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள்.




மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை, கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது.




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், சுப காரியப் பேச்சுக்களின் முன்னேற்றம் காணும் நாள், சிறப்பான நாள்.




குடும்ப மகிழ்ச்சி கூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், வாய்ப்புக்கள் உங்களைத் தேடி வரலாம்.




தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், போசன சுகமுண்டு.




உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




பொருளாதார நிலையில் திருப்தி காணும் நாள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.




மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, கற்பனை மிகுதியான நாள்.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

காக்கத் தெரிந்தவனுக்கு காரியம் கைகூடி வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் கல்வித்துறை பின்னடைவுக்கு நிர்வாகப் பிரச்சினையே காரணம்!

## பிரதமர் ஹரிணி சுட்டிக்காட்டு

(வவுனியா)

வட மாகாணத்தில் கல்வி நிலைமை பின்தங்கியுள்ளமைக்கு நிர்வாக பிரச்சினையே காரணமாக இருப்பதாக தெரிவித்த, பிரதமரும் கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய விரைவில் கல்வி நிர்வாக அதிகாரிகளை அழைத்து கலந்துரையாடி தீர்வினை காண இருப்பதாகவும் தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட கல்வி நிலைமை மற்றும் கல்வி மறுசீரமைப்பு தொடர்பான தெளிவூட்டல் நிகழ்வு கடந்த 3 ஆம் திகதி வவுனியா மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

பிரதமரும், கல்வி அமைச்சருமான ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்ற இந்த கலந்துரையாடலில் வவுனியா மாவட்ட கல்விசார் திணைக்களங்கள் மற்றும் பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டிருந்தது.

குறித்த கலந்துரையாடலில் ஆசிரியர்கள், அதிபர்கள் பற்றாக்குறை அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆசிரியர் தொழிற்சங்கங்கள், அதிபர் தொழிற்சங்கங்கள், கல்வி நிர்வாக அதிகாரிகள் சங்கம் மற்றும் பாடசாலை மட்டங்களில் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் அதிபர்கள், ஆசிரியர்கள் சிலரும் கருத்துக்களை தெரிவித்து இருந்தனர்.

இக்கருத்துக்களை செவிமடுத்த பிரதமர்,

ஆசிரியர் நியமனங்கள் கடந்த ஐந்து வருடங்களாக வழங்கப்பட முடியாமல் இருப்பதற்கு அபிவிருத்தி உத்தியோதர்களாக உள்வாங்கப்பட்டவர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டதன் பின்னர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து அவ் வழக்கு விசாரணையில் இருப்பதே காரணம். விரைவில் இதற்கான தீர்ப்பு கிடைக்கும் என நம்புகின்றேன். அதன் பின்னர் ஆசிரியர் நியமனங்களை வழங்கவுள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (8-250)

# இந்திய மீனவர்கள் நால்வர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கு அருகிலுள்ள இலங்கை கடற்பகுதியில், சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீன்பிடி படகொன்றை இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர்.

குறித்த படகைச் சோதனையிட்ட கடற்படையினர், அதில் இருந்த நான்கு இந்திய மீனவர்களையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் மற்றும் அவர்களின் படகு, மேலதிக விசாரணைகளுக்காக காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளனர்.

பின்னர், சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளும் நோக்கில் அவர்கள் மயிலிட்டி மீன் வள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 140 | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 150 | 250 | 170 | 200 |
| தக்காளி | 160 | 200 | 150 | 130 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 250 | 200 |
| கோவா | 250 | 300 | 300 | 200 | 400 |
| கரட் | 400 | 400 | 350 | 340 | 500 |
| பூசணி | 100 | 140 | 100 | 80 | 200 |
| புடோல் | 100 | 100 | 100 | 80 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 150-250 | 350 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 180 | 120 | 100 | 150 |
| பாகற்காய் | 350 | 450 | 350 | 300 | 400 |
| வெண்டக்காய் | 100 | 100 | 150 | 80 | 300 |
| கருணைக் கிழங்கு | 280 | 330 | 200 | 250 | 350 |
| பயற்றங்காய் | 100 | 160 | 100 | 150 | 150 |
| லீக்ஸ் | 350 | 250 | 150 | 200 | 300 |
| பீற்றூட் | 150 | 150 | 250 | 120 | 150 |
| கறிமிளகாய் | 600 | 500 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 600 | 350 | 400 |
| போஞ்சி | 800 | 750 | 800 | 550 | 800 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 250 | -- | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 60-100 | 150 | 60 | 100 |
| தேசிக்காய் | 100 | 100 | 150 | 100-200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 100-200 | 140-200 |
| இராசவள்ளி | 600 | 650 | 500 | 500 | 800 |
| வெங்காயப்பூ | 300 | 400 | 350 | 250 | 400 |
| முள்ளங்கி | 100 | 120 | 150 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 50 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 150 | 150 | 100 | 110 | 200 |

# கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் பற்றைக்காடொன்றில் இருந்து சுமார் 23 மில்லியன் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாவை கடற்படையினர் மீட்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடுப் பகுதியில் உள்ள பற்றைக்காடொன்றில் கஞ்சா பொதிகள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் அப்பகுதியில் கடற்படையினர் நேற்று முன்தினம் திங்கட்கிழமை தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

அதன் போது, பொதி செய்யப்பட்டு ஈரமான நிலையில் , கஞ்சா பொதிகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் எடை சுமார் 103 கிலோ (ஈரமான எடை) எனவும் , அவற்றின் பெறுமதி சுமார் 23 மில்லியன் ரூபாய் எனவும் கணக்கிடப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக [illegible] பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (8-33)




## கா! நல்லைக் குமரேசனே!

முன்னைக்கு முன்னுமாய் பின்னைக்கு பின்னுமாய்
மூலமுதலாகும் முனைவா!
நன்மைதீ மையென்ற பேதங்கள் யாவிலும்
நடுநிலைமை நாட்டுபவனே
அன்னைக்கு அன்னையாய்த் தந்தைக்குத் தந்தையாய்
ஆகியர வணைக்கும்வேலா!
புன்மையை யோட்டியொரு புதுவாழ்வு காட்டுவாய்
புகழ்நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## அற்புதனே நல்லைக்குமரா

வருவாய் வருவாய் முருகையா
அருள்வாய் அடியோர் அகம் குளிர
தருவாய் கல்வியுடன் செல்வம்
குறையா உடல்நலம் கூடிவர
சிறைவாழ்வு நீங்கி வசந்தம் வீச
காடைத்தனங்கள் கரைந்தே ஓட
கண்ணியம் கருணை நல்கிடுவாய்
பெற்றிடல் வேண்டும் அமைதி நிலை
சற்குணனே சரணம் உன்கழலில்
அற்புதனே அழகா நல்லைக்குமரா

மானந்தன் - அல்வாய்

## நமையாளும் நல்லூரனே சரணம்!

ஏக நாயகனாய் நமையாளும் நல்லூரனே!
இதமைக்கும் அருளும் பெருங்கருணை பெருமானே!
முத்தமிழ் தலைவனே முத்து முக்கனிச் சுவையே!
நால் வேதத்தின் ஞானத்தை நமக்கருள்வாய்!
ஐங்கரனின் தம்பியே அழகுடைப் பெருமானே!
ஆறுமுகமாய் வந்தெமக்கு அருளிடும் கோவே!
ஏழிசையாய் இருப்பவனே எண்ண எண்ண இனிப்பவனே!
எண்குணத்தான் மைந்தனே எழில் வேந்தனே சரணம்!

விஜியகண்ணன் - யாழ்ப்பாணம்

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்கா தேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று புதன்கிழமை மாலை 6.45 மணி தொடக்கம் 8.30 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் குழு இசை நிகழ்வில் பாட்டு - ஸ்ரீ பவராஹா இசைக் கலையக மாணவர்கள், வயலின் - செல்வி. நிரஞ்சலா சுந்தரலிங்கம், மிருதங்கம் - செல்வன். சுந்தரலிங்கம் திவாகரன், ஓகன் - சு.அருணாசலம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து இடம்பெறவுள்ள இசையரங்கு நிகழ்வில் பாட்டு - திருமதி. கனகாம்பரி சிவனேஸ்வரநாதன், வயலின் - ப.சியாம் கிருஷ்ணா, மிருதங்கம் - சி. துரைராஜா ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 79 ஆயிரத்து 917 வெடி பொருட்கள் மீட்பு!

(கண்டாவளை)

வடமாகாணத்தின் முல்லைத்தீவு கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் 35 இலட்சத்து மூவாயிரத்து 666 சதுர மீற்றர் பரப்பளவில் 79 ஆயிரத்து 917 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

வடபகுதியில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் கடந்த மாதம் வரையான வெடிபொருள் அகற்றல் செயற்பாடுகள் தொடர்பில் நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ்வறிக்கையில் மனிதாபிமான கண்ணிவெடியகற்றலில் முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலை, கிளாலி, இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும் கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி ஆகிய பகுதியிலும் 35 இலட்சத்து மூவாயிரத்து 666 சதுர மீற்றர் பரப்பளவில் இருந்து 79 ஆயிரத்து 917 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வுபெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்தார்.

தொடர்ந்து இந்நிறுவனம் கண்ணிவெடியகற்றும் பணிகளை புதுக்குடியிருப்பு அம்பகாமம், மாங்குளம், கொக்காவில், தட்டுவன்கொட்டி, கிளாலி மற்றும் ஆனையிறவிலும் துரித கதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-315)

# திருமறைக் கலாமன்ற மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம்

(யாழ்ப்பாணம்)

லண்டனில் செயற்படும் "சாஸ்வதம்" அமைப்பின் அனுசரணையுடன் திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன மாணவிகள் மூவரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 9ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மையத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அரங்கேற்றத்தில் செல்வி ஜனுக்சா வெஸ்லி ஜ"ட்ஸன், செல்வி றக்சிகா ரஜிகரன், செல்வி ஜெனிலியா யூட் கிறிஸ்ரியன் ஆகிய மாணவிகளே அரங்கேற்றத்தை மேற்கொள்ளவுள்ளனர். இவர்கள் கலைத்தூது அழகியல் கல்லூரியின் நடன ஆசிரியர்களில் ஒருவரான ஸ்ரீமதி சுதர்சினி கரன்சனின் மாணவிகளாவர்.

இந்தியா, சென்னை கலாஷேத்ரா அறக்கட்டளையின் முன்னாள் முதல்வர், ஓய்வுநிலைப் பேராசிரியர் ஏ.ஜெனார்த்தனன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராசாவும், சிறப்பு விருந்தினராக திருமறைக் கலாமன்ற நிர்வாக இயக்குநர் அருள்பணி ஜெறோ செல்வநாயகம் அடிகளாரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அத்துடன் "சாஸ்வதம்" அமைப்பின் நிறுவுனர் ஸ்ரீமதி ஜெயந்தி யோகராஜாவும் இந் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார். இந் நிகழ்வில் நடனத்துறை சார்ந்த 15 வரையிலான மூத்த கலைஞர்கள் கௌரவிக்கப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (8)

# சட்டவிரோதமாக கொண்டு செல்லப்பட்ட பெருந்தொகையான மாட்டிறைச்சி மீட்பு!

(வவுனியா)

கிளிநொச்சியில் இருந்து வவுனியாவிற்கு சட்ட விரோதமாக கொண்டு செல்லப்பட்ட 558 கிலோ நிறையுடைய மாட்டிறைச்சி மாநகர சபையால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கிப் பயணித்த தனியார் பேருந்தில் சுகாதார சீர்கேடான முறையில் உரிய அனுமதியின்றி பெருந்தொகை மாட்டிறைச்சி கொண்டுவரப்பட்டுள்ளது.

அவை வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து பேருந்தில் இருந்து இறக்கப்பட்டு மீண்டும் முச்சக்கர வண்டியில் ஏற்றிச் செல்லப்படவிருந்தது. சம்பவம் தொடர்பாக வவுனியா மாநகரசபைக்கு பொது மக்களால் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு சென்ற மாநகர சபையின் பிரதிமுதல்வர் ப.கார்த்தீபன் மற்றும் சபை உறுப்பினர் அருணன் மற்றும் சுகாதார பரிசோதகர் ஆகியோர் குறித்த செயற்பாட்டை தடுத்து நிறுத்தியதுடன் இறைச்சியினை பறிமுதல் செய்தனர். மீட்கப்பட்ட இறைச்சியின் நிறை சுமார் 558 கிலோ என தெரிவிக்கப்படுகின்றது. குறித்த இறைச்சிகள் சுகாதார பரிசோதகரின் மேற்பார்வையில் எடைபார்க்கப்பட்டு மாநகர சபையில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளது.

அதனை கொண்டு வந்த நபர் மற்றும் ஆட்டோ சாரதிகள் இருவர் உள்ளடங்கிய மூவர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வவுனியா மாநகரசபை தெரிவித்துள்ளது. (8-250)

### மன்னாரில்

# காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்கள் அமைப்பதற்கு மக்கள் எதிர்ப்பு!

## 2 ஆவது நாளாக தொடரும் போராட்டம்



(மன்னார்)

மன்னார் தீவு பகுதியில் புதிதாக இரண்டாம் கட்டம் அமைக்கப்படவுள்ள காற்றாலை மின் உற்பத்தி கோபுரங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், தற்போது மன்னார்-மதவாச்சி பிரதான வீதியூடாக கொண்டு வரப்பட்டு கொண்டு இருக்கும் காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பதற்கான பொருட்களை மன்னார் நகருக்குள் கொண்டு வருவதற்கும் எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் நேற்று செவ்வாய்க் கிழமை மன்னாரில் அமைதியான முறையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டத்திற்கு பூரண ஆதரவை வழங்கும் வகையில் மன்னார் நகர பகுதியில் உள்ள ஒரு சில உணவகங்களை தவிர அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டது.

மீனவர்கள் கடற்தொழிலுக்கு செல்லாது குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

மேலும் மன்னார் தீவுக்குள் இரண்டாம் கட்ட காற்றாலை திட்டங்களுக்கான மூலப் பொருட்கள் எதுவும் தீவு பகுதிக்கு கொண்டு வரக்கூடாது என்பதை கருத்தில் கொண்டு தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரண்டாவது நாளாக நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்று வருகின்ற குறித்த அமைதி போராட்டத்தில் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மாக்கஸ் அடிகளார், அருட்தந்தையர்கள், பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், மீனவ அமைப்புகள், வர்த்தகர்கள், பொதுமக்கள், இளைஞர்கள், உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர். (8-285)

# யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம் அதிபர் பதவி வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம் கல்வி வலயத்துக்குட்பட்ட பின்வரும் பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | அதிபர் பதவி வெற்றிடம் ஏற்பட்டுள்ள பாடசாலை | பாடசாலை வகை | விண்ணப்பங்கள் கோரும் அதிபர் தரம் |
|---|---|---|---|
| 01 | யா/உரும்பிராய் றோ.க.த.க பாடசாலை | III | III |
| 02 | யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாலயம் | III | III |
| 03 | யா/சென் பெனடிக்ற் றோ.க.த.க பாடசாலை | III | III |
| 04 | யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க. பாடசாலை | III | III |
| 05 | யா/இருபாலை சி.சி.த.க. பாடசாலை | III | III |
| 06 | யா/பூம்புகார் அ.த.க. பாடசாலை | II | II/ III |
| 07 | யா/சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயம் | II | II/ III |
| 08 | யா/கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை | III | III |
| 09 | யா/கலட்டி மெ.மி.த.க. வித்தியாலயம் | II | II/ III |

**தகைமைகள்:**

- வகை II பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் II** மற்றும் **தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **இலங்கை அதிபர் சேவை தரம் II** ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பத்தில் மட்டும் **தரம் III** அதிபர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படும்.
- வகை III பாடசாலைக்கு **இலங்கை அதிபர் சேவை தரம் III** ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

❖ விண்ணப்பிக்க விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் ஆகக்குறைந்தது மூன்று வருட காலம் சேவையாற்றக்கூடிய வயதெல்லை உடையவராக இருத்தல் வேண்டும்.

❖ விண்ணப்பதாரி தற்போது அதிபராகக் கடமையாற்றும் பாடசாலையில் 03 வருட சேவையை நிறைவு செய்திருந்தால் மட்டுமே விண்ணப்பிக்க முடியும். பொருத்தமான அதிபர் தரத்தினையுடைய பாடசாலையை சேவை நிலையமாகக் கொண்டிராதவர்களுக்கும், பிரதி உதவி, அதிபராகக் கடமையாற்றும் அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கும் இந்நிபந்தனை பொருத்தமற்றது.

குறிப்பு:

❖ விண்ணப்பிக்க விரும்புவோர் மாதிரி விண்ணப்ப படிவத்தை யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகத்தில் பெற்று. பூரணப்படுத்தி. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தினை தங்களின் வலயக் கல்விப் பணிப்பாளரூடாக 2025.08.26 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் **"வலயக்கல்விப் பணிப்பாளர், யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர்"** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "அதிபர் பதவிக்கான விண்ணப்பம் - 2025 (III)" எனக் குறிப்பிடவும்.

**மாலதி முகுந்தன்**
**வலயக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம்-யாழ்ப்பாணம்.**
**செம்மணி வீதி, நல்லூர்.**

(சி-3575)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் கொள்வனவு
### அமெரிக்காவின் குற்றச்சாட்டுக்களை நிராகரிக்கும் இந்தியா



(டில்லி)

ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதால் இந்தியாவிலிருந்து வரும் பொருட்களுக்கான வரிகளை உயர்த்துவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் மீண்டும் அச்சுறுத்தல் விடுத்தார்.

அதேநேரத்தில், டில்லி அவரது தாக்குதலை "நியாயமற்றது" என்று கூறியதுடன், அதன் பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதாக சபதம் செய்து, இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தக பிளவை ஆழப்படுத்தியது.

இது குறித்த சமூக ஊடகப் பதிவில் ட்ரம்ப்,

இந்தியா ரஷ்ய எண்ணெயை பெருமளவில் வாங்குவது மட்டுமல்லாமல், வாங்கிய எண்ணெயில் பெரும்பகுதியை திறந்த சந்தையில் பெரிய இலாபத்திற்கு விற்கிறது.

உக்ரேனில் ரஷ்ய போரினால் எத்தனை பேர் கொல்லப்படுகிறார்கள் என்பது அவர்களுக்கு கவலையில்லை.

இதன் காரணமாக, அமெரிக்காவிற்கு இந்தியா செலுத்தும் வரியை நான் கணிசமாக உயர்த்துவேன் என்று பதிவிட்டார்.

இதற்கு பதிலளித்துள்ள புது டெல்லியின் வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர்,

இந்தியா அதன் தேசிய நலன்களையும் பொருளாதார பாதுகாப்பையும் பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

இந்தியாவை குறிவைப்பது நியாயமற்றது எனப் பதிவிட்டார்.

உக்ரேனுடனான 3 1/2 ஆண்டுகால போரை முடிவுக்குக் கொண்டுவர மொஸ்கோ நடவடிக்கை எடுக்காவிட்டால், வெள்ளிக்கிழமை முதல் ரஷ்யா மீதும் அதன் எரிசக்தி ஏற்றுமதியை வாங்கும் நாடுகள் மீதும் புதிய தடைகளை விதிக்கப்போவதாக ட்ரம்ப் கூறியுள்ளார்.

காலக்கெடு இருந்த போதிலும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தனது நிலைப்பாட்டை மாற்றுவதற்கான எந்த பொது அறிகுறியையும் காட்டவில்லை.

வார இறுதியில், இரண்டு இந்திய அரசாங்க வட்டாரங்கள் ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் ட்ரம்பின் அச்சுறுத்தல்களை மீறி இந்தியா ரஷ்யாவிலிருந்து எண்ணெய் வாங்குவதைத் தொடரும் என்று தெரிவித்தன.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ரஷ்யா உக்ரேனை ஆக்கிரமித்ததிலிருந்து, மொஸ்கோவிலிருந்து தன்னைத் தூர விலக்கிக் கொள்ளுமாறு மேற்கத்திய நாடுகளின் அழுத்தத்தை இந்தியா எதிர்கொண்டுள்ளது.

ரஷ்யாவுடனான அதன் நீண்டகால உறவுகள் மற்றும் பொருளாதாரத் தேவைகளை மேற்கோள் காட்டி, டில்லி இதை எதிர்த்தது.

ஜூலை மாதத்தில் ட்ரம்ப் ஏற்கனவே இந்திய இறக்குமதிகளுக்கு 25% வரிகளை அறிவித்திருந்தார்.

மேலும், அமெரிக்க அதிகாரிகள் அமெரிக்க-இந்தியா வர்த்தக ஒப்பந்தத்திற்கு இடையூறாக நிற்கும் பல்வேறு புவிசார் அரசியல் பிரச்சினைகளை மேற்கோள் காட்டியுள்ளனர்.

வளரும் நாடுகளின் பரந்த பிரிக்ஸ் குழுவை அமெரிக்காவிற்கு விரோதமானது என்றும் ட்ரம்ப் விமர்சித்துள்ளார்.

அந்த நாடுகள் அவரது குற்றச்சாட்டை நிராகரித்துள்ளன.

ரஷ்யாவிலிருந்து கடல்வழி மசகு எண்ணெயை வாங்கும் மிகப்பெரிய நாடாக இந்தியா உள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை ஒரு நாளைக்கு சுமார் 1.75 மில்லியன் பீப்பாய்கள் ரஷ்ய எண்ணெயை இறக்குமதி செய்துள்ளது.

இது ஒரு வருடத்திற்கு முன்பு இருந்ததை விட 1% அதிகமாகும் என்று வர்த்தக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந)

## ரஷ்யாவில் மீண்டும்
### சக்திவாய்ந்த நிலநடுக்கம்



(மொஸ்கோ)

ரஷ்யாவில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.


ரஷ்யாவின் கம்சட்கா பகுதியில் கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக நிலநடுக்கங்கள் ஏற்பட்டு வருகிறது. தொடரும் இந்த சக்தி வாய்ந்த நிலநடுக்கங்கள் எதிரொலியாக, சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் 600 ஆண்டுகளாக உறங்கிக் கொண்டிருந்த கிராஷெனின்னிகோவ் எரிமலை வெடித்து சிதறியது. நிலநடுக்கத்தின் பின் அதிர்வே எரிமலை வெடிக்க காரணம் என்று வல்லுநர்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில், 6 நாட்கள் கழித்து கம்சட்கா பகுதியில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிக்டர் அளவுகோலில் 6 ஆக பதிவாகி உள்ளது.

நிலநடுக்கத்தினால் ஏதேனும் பாதிப்புகள், உயிரிழப்புகள் ஏற்பட்டு உள்ளதா என்பது பற்றிய எந்த தகவல்களும் வெளியாகவில்லை. (ந)

## ஒரே நாளில் எண்மருக்கு
### மரண தண்டனை விதித்த சவுதி



(ஜெர்த்தா)

சவுதி அரேபியாவில் போதைப்பொருள் கடத்தல் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட 8 பேருக்கு ஒரே நாளில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

கஞ்சா கடத்திய குற்றத்துக்காக, நாட்டின் தெற்கு பகுதியான நஜ்ரானில் 4 சோமாலியர்கள் மற்றும் 3 எத்தியோப்பியர்கள் தூக்கிலிடப்பட்டனர்.

அத்துடன் ஒரு சவுதி குடிமகனுக்கு, தனது தாயைக் கொலை செய்த குற்றத்துக்காக மரணதண்டனை நிறைவேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து சவுதி அரேபியாவில் 230 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதில் 154 பேர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காகத் தூக்கிலிடப்பட்டனர்.

சவுதியில் 2022 ஆம் ஆண்டில் 19 பேரும், 2023 ஆம் ஆண்டில் 2 பேரும், 2024 ஆம் ஆண்டில் 117 பேரும், போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காகத் தூக்கிலிடப்பட்டனர்.

கடந்த 2024ஆம் ஆண்டு 338 மரண தண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. (ந)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம்;

# வெளியேற ரஷ்யா முடிவு

**(மொஸ்கோ)**

**அமெரிக்கா ரஷ்யாவுக்கு இடையில் கடந்த 1987 இல் கையெழுத்தான இடைநிலை அணுசக்தி ஒப்பந்தத்திற்கு இனி கட்டுப்படப்போவதில்லை என ரஷ்யா அறிவித்துள்ளது.**



மேற்கு நாடுகளின் செயல்கள் தங்கள் துகாப்புக்கு "நேரடி அச்சுறுத்தலை" நவாக்கியதாக கூறியுள்ள ரஷ்யா இந்த ஷவை எடுத்துள்ளது.

ரஷ்யாவின் இந்த முடிவு அணு ஆயுத ல்லமை கொண்ட இருநாடுகளுக்கும் டையே ஆயுத போட்டியை அதிகரிக்க டும் என்ற கவலையை சர்வதேச ாவில் எழுப்பியுள்ளது.

இணக்கத்திற்கு வராமல் ரஷ்யா - க்ரைன் மோதல் தொடர்ந்து நீடித்து நவதால், அமெரிக்க ஜனாதிபதி ானால் ட்ரம்ப், ரஷ்யாவை கடுமையாக மர்சித்து வருகிறார்.

உலகின் பல்வேறு நாடுகளிலும் க்கும் மோதலை நானே நிறுத்தினேன் ன கூறிவரும் ட்ரம்பின் பேச்சை ஏற்க ஷ்யா மறுத்து வருவதால் ரஷ்ய ாதிபதி மீது அமெரிக்க ஜனாதிபதி கடும் ாபத்தில் உள்ளார்.

ஜனாதிபதியாக பதவியேற்றால் ஒரே ளில் உக்ரைன் ரஷ்யா போரை நிறுத்துவேன் என கடந்த ஆண்டு டொனால் ட்ரம்ப் கூறியிருந்தார்.

ஆனால், ஜனாதிபதியாக பதவியேற்று சுமார் 8 மாதங்கள் ஆகிவிட்ட நிலையிலும் ரஷ்யா- உக்ரைன் போரை ட்ரம்பால் நிறுத்த முடியவில்லை.

ட்ரம்ப் அவ்வப்போது ரஷ்யாவை எச்சரிக்கும் விதமாக பேசினாலும், நாங்கள் ஒன்றும் ஈரான், ஈராக் இல்லை என்று ரஷ்யா பதிலடி கொடுத்து வருகிறது.

சிறப்பு துாதர்களை கொண்டு பேச்சுவார்த்தை நடத்தியும் ரஷ்ய ஜனாதிபதி இறங்கி வரவில்லை.

இதனால், கடும் கோபம் அடைந்த ட்ரம்ப், ரஷ்யாவை பொருளாதார ரீதியாக முடக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

அந்த வகையில், ரஷ்யாவிடம் இருந்து கச்சா எண்ணெய் கொள்முதலை இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகள் நிறுத்த வேண்டும் என்று ட்ரம்ப் தொடர்ந்து கூறி வருகிறார்.

மேலும், ரஷ்யாவிடமிருந்து எண்ணெய் வாங்குவதால், இந்தியா மீதான வரியை மேலும் உயர்த்தப்போவதாக மிரட்டல் விடுத்துள்ளார்.

இதற்கு மத்தியில் ரஷ்யாவின் முன்னாள் ஜனாதிபதி திமித்ரியின் மெத்வதேவ் பேச்சால் கோபமடைந்த ட்ரம்ப், இரண்டு அணு ஆயுத நீர்மூழ்கிக் கப்பல்களை ரஷ்யா பகுதிகளுக்கு அனுப்ப தான் உத்தரவிட்டிருப்பதாக கடந்த வெள்ளிக்கிழமை தெரிவித்தார்.

இவ்வாறான நிலையில், உலகின் சக்தி வாய்ந்த நாடுகளாக கருதப்படும் ரஷ்யா- அமெரிக்கா இடையே வலுத்து வரும் மோதல் சர்வதேச அளவில் பதற்றத்தை அதிகரித்துள்ளது.


இந்த நிலையில்தான், அமெரிக்காவுடனான அணு ஒப்பந்தங்களில் இருந்து வெளியேற போவதாக ரஷ்யா அறிவித்துள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது தொடர்பாக ரஷ்யா தரப்பு கூறும் போது, "மேற்கு நாடுகளின் செயற்பாடுகள் தங்கள் நாட்டிற்கு நேரடி அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாகவும், எனவே, அணு ஒப்பந்தத்தை பராமரிப்பதற்கான சூழல் மறைந்துவிட்டதால், ரஷ்யா இனியும் முந்தைய சுயக்கட்டுப்பாடுகளை பின்பற்றாது" என தெரிவித்துள்ளது.

அமெரிக்கா ரஷ்யா இடையிலான உறவில் ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கடந்த 1987 ஆம் ஆண்டு இடைநிலை - தூர அணுசக்தி ஃபோர்ஸ் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# கனடாவில் பற்றி எரியும் காட்டுத்தீ

# அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை



(ஒட்டாவா)

கனடாவில் சஸ்கட்சிவான், மனிடோபா, ட்டிஷ் கொலம்பியா, அல்பிரட்டா மற்றும் ன்டாரியோ மாகாணங்களில் பற்றி எரிந்து வரும் காட்டுத் தீ காரணமாக ஏற்பட்டுள்ள புகை மண்டலம் அமெரிக்காவின் பல பகுதிகளுக்கும் பரவி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

குறிப்பாக நியூயோர்க், நியூ ஜெர்சி, பென்சில்வேனியா உள்ளிட்ட பகுதிகளில் புகை மண்டலம் சூழ்ந்து காணப்படுவதாகவும், இதனால் அப்பகுதியில் வசிப்பவர்கள் கண் எரிச்சல், மூச்சுத் திணறல் உள்ளிட்ட பல் வேறு சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அமெரிக்க சுற்றுச்சூழல் பாதுகாப்பு முகமை வெளியிட்ட அறிக்கையில், புகை காரணமாக காற்றின் தரம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும், புற்றுநோய் மற்றும் சுவாச நோய்களுக்குள்ள ஆபத்து அதிகரித்துள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.


இதனடிப்படையில், மூச்சுத்திணறல், ஆஸ்துமா, மற்றும் பிற சுவாச நோய்கள் ஏற்படும் வாய்ப்பு காணப்படுவதாகவும் எனவே பொதுமக்கள் வெளியே செல்லும் போது முகக் கவசத்தை அணிவது அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை புகையின் தாக்கம் வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கக்கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளதால், கனடா மற்றும் அமெரிக்க அதிகாரிகள் கூட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகஸ்ட் மாத இராசி பலன்கள்

## எதிர்பார்த்த பண உதவிகள் கிடைக்கும்!



**தனுசு: கிரகநிலை** - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி (வ), இராகு - களத்திர ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - அஷ்டம ஸ்தானத்தில் சூரியன் - பாக்கிய ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து புதன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.08.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து சூரியன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

21.08.2025 அன்று சுக்கிரன் களத்திர ஸ்தானத்தில் இருந்து அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25.08.2025 அன்று அஷ்டம ஸ்தானத்தில் இருந்து புதன் பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் பேச்சின் இனிமையால் காரியம் கைகூடும். பஞ்சம விரையாதிபதி செவ்வாயின் சஞ்சாரம் சுப பலன்களைத் தரும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். எதிலும் கூடுதல் கவனத்துடன் செயற்படுவது நல்லது. தொழில் வியாபாரம் திருப்தியாக நடக்கும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வாடிக்கையாளர்களை அனுசரித்து செல்வது நல்லது.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக வேலையாக அலைய வேண்டி இருக்கும். புதிய பொறுப்புகள் சிலருக்கு கிடைக்கலாம். வெளிநாடு முயற்சிப்பவர்களுக்கு அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் சகஜ நிலை காணப்படும். உறவினர்கள் மூலம் நல்ல தகவல் வந்து சேரும். கணவன் மனைவிக்கிடையே இருந்த இடைவெளி குறையும்.

**பெண்கள்:** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். அரசியல்வாதிகள் கட்சித் தலைமையின் ஆணையை மீறி செயற்படக் கூடாது. கலைத்துறையினருக்கு வெளிநாட்டு புது நிறுவனங்கள் உங்களுக்கு வாய்ப்பளிக்கும்.

**மாணவர்கள்:** மற்றவர்களை அனுசரித்து செல்வது நல்லது. கல்வியில் திருப்தி உண்டாகும்.




**மூலம்:** இந்த மாதம் மிகச் சிறந்த பலன்களை உழைப்பின் மூலம் அடையலாம். நண்பர்களுக்கும் உற்றார் உறவினர்களுக்கும் தேவையான உதவிகளைச் செய்து மன நிறைவு அடைவீர்கள்.

குடும்பத்தில் திருமணம் போன்ற சுப நிகழ்ச்சிகள் நடக்கும். மழலைச் செல்வம் இல்லாதவர்களுக்கு குழந்தை பாக்கியம் கிடைக்கும்.

**பூராடம்:** இந்த மாதம் உங்கள் எதிரிகளின் பலம் குறையும். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். மன அழுத்தம் மறையும். சிந்தனையில் தெளிவு உண்டாகும்.

**உத்திராடம் 1ஆம் பாதம்:** இந்த மாதம் சகோதர, சகோதரிகள் மற்றும் நண்பர்கள் மூலமாக நன்மை அடைவீர்கள். புதிய சொத்துக்களை வாங்குவீர்கள். ஆன்மீகப் பெரியோர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளைப் பெறுவீர்கள். உங்கள் தோற்றத்தில் பொலிவு உண்டாகும். புத்திசாலிகளின் நட்பைப் பெற்று பலனடைவீர்கள்.

**பரிகாரம்:** குருவிற்கு சாமந்தி மலரை சமர்ப்பித்து வியாழக் கிழமையில் வணங்கி வர எல்லா நன்மைகளும் உண்டாகும்.

சந்திராஷ்டம தினங்கள்: ஆகஸ்ட் 21, 22.

அதிர்ஷ்ட தினங்கள்: ஆகஸ்ட் 03, 04, 05, 30, 31

## எல்லாவகையிலும் நல்லதே நடக்கும்!



**மகரம்: கிரகநிலை** - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி (வ), இராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் புதன், குரு, சுக்கிரன் - களத்திர ஸ்தானத்தில் சூரியன் - அஷ்டம ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சந்திரன், செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

**கிரகமாற்றம்:** 03.08.2025 அன்று ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து புதன் களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17.08.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து சூரியன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 21.08.2025 அன்று சுக்கிரன் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 25.08.2025 அன்று களத்திர ஸ்தானத்தில் இருந்து புதன் அஷ்டம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் எல்லாவகையிலும் நல்லதே நடக்கும். சுக்கிரன் சஞ்சாரம் அனுகூலமான பலன் தரும். பணவரத்து அதிகரிக்கும். எதிர்ப்புகள் விலகும்.

நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். விரும்பிய காரியங்களை செய்து சாதகமான பலன் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில் வியாபாரம் தொடர்பான காரியங்கள் சாதகமாக நடந்து முடியும். வியாபார போட்டிகள் குறையும். பழைய பாக்கிகள் வசூலாகும்.

தொழில் விரிவாக்கத்திற்கு தேவையான பண உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேல் அதிகாரிகளின் ஆதரவு கிடைக்க பெறுவார்கள். பணி நிமித்தமாக வெளிநாடு செல்ல வேண்டி வரும். குடும்பத்தில் சுப காரியங்கள் நடக்கும். கணவன், மனைவிக்கிடையே அன்பு அதிகரிக்கும். பிள்ளைகள் உங்கள் சொல் படி நடப்பது மனதுக்கு திருப்தி தரும்.

**உறவினர்கள்:** நண்பர்கள் மூலம் நன்மை நடக்கும்.

**பெண்கள்:** பணவரத்து எதிர்பார்த்த படி இருக்கும். அரசியல்வாதிகள் எதிர்ப்புகளையும் மீறி முன்னேறுவர்.

கலைத்துறையினரின் படைப்புத் திறன் வளரும்.

**மாணவர்கள்:** கல்வியில் எதிர்பார்த்த உயர்வு கிடைக்கும். உற்சாகமாக காணப்படுவீர்கள்.




**உத்திராடம் 2, 3, 4 பாதங்கள்:** இந்த மாதம் எதிரிகளால் தொல்லைகள் ஏற்படாது. உடல் உபாதைகள் ஏதேனும் இருப்பின், இக்கால கட்டத்தில் தீரும். வீண் வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். அலைச்சல்களுடன் நடந்த செயல்கள் நல்லபடியாக முடிவடையும். வெளியில் கொடுத்திருந்த பணம் திரும்பவும் கை வந்து சேரும்.

**திருவோணம்:** இந்த மாதம் சிலர் மனம் விரும்பிய வீட்டிற்குக் குடி பெயர்வார்கள். தக்க சமயத்தில் உயர்ந்தவர்களின் நட்பைப் பெற்று கௌரவக் குறைவு ஏற்படாமல் காக்கப்படுவீர்கள். திருட்டு போயிருந்த பொருட்கள் திரும்பவும் கிடைக்கும். உறுதியின்றிச் செய்த வேலைகளில் ஒரு பிடிப்பு ஏற்பட்டு அவை மளமளவென்று நடந்தேறும்.

**அவிட்டம் 1, 2 பாதங்கள்:** இந்த மாதம் உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு தேடி வரும். வருமானம் சீராக இருக்கும். விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும். மேலதிகாரிகளின் அன்பும், ஆதரவும் கிடைக்கும். சக ஊழியர்களுடன் நல்ல நட்பு தொடர்வதால் உங்களின் வேலைகள் குறித்த காலத்திற்குள் நிறைவேறிவிடும்.

**பரிகாரம்:** சனி பகவானுக்கு எள் தீபம் ஏற்றி வணங்கி வர கஷ்டங்கள் நீங்கும். ஆரோக்கியம் உண்டாகும்.

சந்திராஷ்டம தினங்கள்: ஆகஸ்ட் 23, 24, 25.

அதிர்ஷ்ட தினங்கள்: ஆகஸ்ட் 06, 07.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SpaceX - STARLINK நிறுவனம் Singer ஐ இலங்கையின் அங்கீகாரமுடைய சில்லறை விற்பனையாளராக நியமித்துள்ளது

அமெரிக்காவை தளமாகக் கொண்ட SpaceX நிறுவனம், இலங்கையின் முன்னணி நுகர்பொருள் மற்றும் வீட்டு உபயோக சாதனங்களை விற்பனை செய்யும் நிறுவனமான SINGER ஸ்ரீ லங்காவை, Starlink செய்மதி இணையதள சேவையின் அங்கீகார சில்லறை விற்பனையாளராக நியமித்துள்ளது. நாட்டின் பல பகுதிகளில் பாரம்பரிய இணைய வசதிகள் கிடைக்காத சூழலில், இந்த ஒப்பந்தம் இணைய அணுகலைப் புரட்சி செய்யும் முக்கிய கட்டமாக அமைந்துள்ளது.

SpaceX நிறுவனம் உருவாக்கிய Starlink என்பது உயர் செயற்றிறனுடைய செய்மதி இணையதள அமைப்பாகும். இது உலகின் எந்த இடத்திலும் வேகமான, நம்பகமான மற்றும் வரம்பற்ற இணைய சேவையை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கீழ் நில வட்டத்திலுள்ள நூற்றுக்கணக்கான செய்மதிகளை பயன்படுத்தி, இது நிலத்தில் இருக்கும் கட்டமைப்புகளின் வரம்புகளைத்தாண்டி, வாடிக்கையாளர்களுக்கு தடையில்லாத இணைய அனுபவத்தை வழங்குகிறது. இந்த தொழில்நுட்பம் இலங்கையில் கிடைப்பது பல ஆண்டுகளாக பொருளாதார வளர்ச்சி, கல்வி மற்றும் டிஜிற்றல் உள்ளடக்கத்தை தடுக்கும் இணைய மின்மைச் சிக்கலை தீர்க்கும் மிகப் பெரிய வாய்ப்பாகும்.

இந்த முக்கிய கூட்டாண்மையின் மூலம், உலகத் தரத்திலான தொழில்நுட்பங்களை இலங்கை மக்களுக்கு அருகிலே கொண்டு செல்லும் SINGER நிறுவனம், நாட்டில் தொழில்நுட்ப முன்னேற்றத்தை வழிவகுக்கும் முன்னணி சக்தியாக தன்னை இன்னுமொருமுறை நிலைநிறுத்தியுள்ளது.

Starlink சாதனங்களை SINGER நிறுவனத்தின் விரிவான விற்பனை மற்றும் ஒன்லைன் வலையமைப்பின் மூலமாகக் கொள்முதல் செய்து, செயற்படுத்த வாடிக்கையாளர்களுக்கு முடியும். அதிக இணையத்தரவினை பயன்படுத்தும் வீட்டு உபயோகத்திற்கோ, தொலைதொடர்பு தேவைப்படும் தொழிலாளர்களுக்கோ, நிறுவனங்களுக்கோ, பள்ளிகளுக்கோ, விவசாயம், அவசர சேவைகள், தொழில் முயற்சியாளர்கள், பயணிகளுக்கு இது நிலையான உயர் வேக இணைய சேவையை வழங்குகிறது.


பயனர்கள் இப்போது Starlink மொபைல் செயலி மூலம் தங்கள் Starlink சேவையை சுயாதீனமாக செயற்படுத்தலாம். மாதாந்த சந்தா வரம் பற்றது மற்றும் வாடிக்கையாளர்கள் தங்கள் சொந்த விதிமுறைகளில் தங்கள் இணைய பயன்பாட்டை நிர்வகிக்கும் சுதந்திரத்தையும் வழங்குகிறது.

ஒவ்வொரு Starlink வன் பொருள் தொகுப்பிலும் Starlink டிஷ் Wi-Fi ரவுட்டர், கேபிள்கள் மற்றும் பவர் எடப் டர் ஆகியவை அடங்கும். SINGER குடியிருப்பு மற்றும் வணிக தர பயன்பாடுகளுக்கு ஏற்றவாறு மாறுபாடுகளை வழங்குவதோடு, சாதன விலை 69,000 LKR முதல் இருக்கும். அனைத்து சாதனங்களும் SINGERரின் நம்பகமான விற்பனைக்குப் பிந்தைய சேவை மற்றும் உத்தர வாதத்துடன் பெற்றுக்கொள்ள முடியும்

நாடு முழுவதும் உள்ள SINGER மற்றும் Singer Mega விற்பனை நிலையங்களிலும், www.singer.lk இல் ஒன்லைனிலும் Starlink வன்பொருள் வாங்குவதற்கு கிடைக்கிறது.

நாடு முழுவதும் மேலதிக கட்டணம் இல்லாமல் விநியோகிக்கப் படுகின்றது. இந்த புரட்சிகரமான இணைப்பு நீர்வை இலங்கை நுகர்வோரின் பரந்த பிரிவுகளுக்கு அணுகக்கூடிய வகையில், நெகிழ்வான கடனட்டை கட்டண விருப்பங்கள் மூலம் கிடைக்கின்றன.




# கொமர்ஷல் வங்கியின் 'அருணலு சித்திரம் 2025' இளம் கற்பனைகளை பிரதிபலிக்கவும், பாரிய வெற்றியைப் பெறவும் அழைக்கிறது

தூரிகைகள், கற்பனைகள் தயாராக உள்ளன இலங்கையின் மிகவும் விரும்பப்படும் குழந்தைகள் ஓவியப் போட்டியான "அருணலு சித்திரம்" 2025 ஆம் ஆண்டு மீண்டும் வருகிறது. 4 கொமர்ஷல் வங்கியால் ஆறாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட இந்த அற்புதமான நாடளாவிய மற்றும் சர்வதேச சித்திரப் போட்டி டிஜிற்றல் முறையில் தொடங்கப்பட்டுள்ளதுடன் முதல் 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் தமது படைப்பாற்றலை வெளிப்படுத்தவும், ரூ.4.8 மில்லியனுக்கும் அதிகமான ரொக்கப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்களைப் பெறவும் போட்டியில் பங்குகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இளம் திறமைகளை எல்லைகளுக்கு அப்பால் பிரகாசிக்க தளத்தினை வழங்கும் அருணலு சித்திரம் -2025 இலங்கையில் வசிக்கும் பிள்ளைகளுக்கும் வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையைச் சேர்ந்த பிள்ளைகளுக்கும் திறந்திருக்கும். முந்தைய ஆண்டுகளைப் போலவே, போட்டியும் முற்றிலும் இணையத்தள ரீதியாகவே நடத்தப்படும். பங்கேற்பாளர்கள் தமது சித்திரப் படைப்புகளை www.arunalusiththam.lk என்ற பிரத்தியேக வலைத்தளத்தில் ஓகஸ்ட் 31, 2025 அல்லது அதற்கு முன்னதாக பதிவேற்றுவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். 4-5, 6-7, 8-10, 11-13 மற்றும் 14-16 வயதுக்குட்பட்ட ஐந்து வயதுப் பிரிவுகளில் பதிவுகள் பரிசீலிக்கப்படும். ஒவ்வொரு பிள்ளையும் கொமர்ஷல் வங்கிக் கணக்கை வைத்திருக்கிறாரா இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் போட்டியில் பங்கேற்க அழைக்கப்படுகிறார்கள் என்று வங்கி தெரிவித்துள்ளது. இலங்கையில் வெற்றியாளர்கள் முதலில் மாகாண மட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் தேசிய




அளவில் உயர் விருதுகளுக்கு போட்டியிடுவதற்காக முன்னேறுவார்கள். ஒவ்வொரு வயது பிரிவிலும் தேசிய அளவிலான வெற்றியாளர்கள் முறையே முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களுக்கு ரூ.100,000, ரூ.75,000 மற்றும் ரூ.50,000 ரொக்கப் பரிசுகளைப் பெறுவார்கள். ஒவ்வொரு மாகாணங்களிலும் ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் முதல் மூன்று வெற்றியாளர்களுக்கு தலா ரூ.25,000, ரூ.15,000 மற்றும் ரூ.10,000 வழங்கப்படும். எந்த இளம் திறமையும் அங்கீகரிக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் ஒவ்வொரு மாகாணத்திலும் 4 முதல் 10 ஆம் இடங்களைப் பெறும் நூற்றுக் கணக்கான வளரும் இளம் கலைஞர்களுக்கு தகுதிகாண் சான்றிதழ்கள் வழங்கப்படும். சான்றிதழ்கள் இந்தப் போட்டியில் பங்கேற்பை ஊக்குவிக்கும் நிறுவனங்களும் அங்கீகரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மாவட்டத்திலும் மொத்தம் ரூ.1.25 மில்லியன் பாடசாலை பரிசுகள் என்ற ரீதியில் அதிக எண்ணிக்கையிலான பதிவுகளை சமர்ப்பிக்கும் பாடசாலைக்கு தலா ரூ.50,000 வழங்கப்படுகிறது.

உலகளாவிய ரீதியில், வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களின் பிள்ளைகளும் பங்கேற்கலாம். வெளிநாடுகளில் இருந்து ஒவ்வொரு வயதுப் பிரிவிலிருந்தும் ஒரு வெற்றியாளர் சிறந்த பதிவுக்கு ரூ.50,000ஐ வெல்ல முடியும்.

ரொக்கப் பரிசுகளை வெல்லும் கொமர்ஷல் வங்கியின் "அருணலு" அல்லது "இசுரு" சிறுவர் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் காத்திருக்கின்றன. இது வங்கியின் இளம் வாடிக்கையாளர்களுக்கு மேலதிக பலனளிக்கும் அனுபவமாக அமைகிறது.

அனைத்து சித்திரங்களும் நிபுணத்துவம் வாய்ந்த நடுவர் குழுவால் மதிப்பீடு செய்யப்படும். ஒவ்வொரு தெரிவும் கலைத் தகுதி மற்றும் யதார்த்த ரீதியில் வழிநடத்தப்படும். இந்தப் போட்டி வெகுமதி அளிப்பதுடன் மட்டுமல்லாமல், பிள்ளைகள் தம்மை சுதந்திரமாக வெளிப்படுத்தவும், அவர்களின் படைப்பாற்றலை வளர்க்கவும் ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது என்று வங்கி தெரிவித்துள்ளது.

உலகின் முதல் 1000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் முதலாவது வங்கியாக கொமர்ஷல் வங்கி திகழ்வதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் (CSE) வங்கித் துறையில் அதிக சந்தை மூலதனத்தைக் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கரை எழில்' நூலுக்கான ஆக்கங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச கலாசார பேரவையில் வெளியிடப்படும் "கரைஎழில்" நூலுக்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

ஆக்கங்கள் சொந்த ஆக்கமாக இருக்க வேண்டும். முன்னர் நூல்களில் பிரசுரமாகாதவையாக இருக்க வேண்டும்.

ஆக்கங்கள் அனுப்ப வேண்டிய முகவரி-பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், கரைச்சி. ஆக்கங்களை நேரடியாகவும் வழங்க முடியும்.

ஆக்கங்கள் அனைத்தும் எதிர்வரும் 31.08.2025 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும்.

மலர்க்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் ஆக்கங்கள் அச்சுப்பதிப்பு செய்யப்படும்.

கரைச்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேச மக்களின் கலை கலாசாரம், வாழ்வியல் முறைகள் என்பனவற்றை உள்ளடக்கிய ஆக்கங்கள் கரைச்சி பிரதேசத்தினை பூர்வீகமாக வசிப்பவர்கள் அல்லது கரைச்சி பிரதேச செயலக பிரிவில் தொழில் நிமித்தம் கடமை புரிகின்றவர்களிடம் இருந்தும் வரவேற்கப்படுகின்றன என செயலாளர் த.முகுந்தன் அறிவித்துள்ளார். (8)

# மன்னார் காற்றாலை மின்திட்டம்

## விசேட கலந்துரையாடல்

(கொழும்பு)

மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டம் தொடர்பில் நாளை வியாழக்கிழமை பாராளுமன்ற வளாகத்தில் அமைச்சர்கள் தலைமையில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்று செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற அமர்வின் போது அமைச்சர் விமல் ரத்நாயக்கவிடம் கேள்வி ஒன்றை எழுப்பி இருந்தேன். காற்றாலை மின் கோபுரங்கள் அமைப்பது குறித்து மன்னார் மாவட்டத்தில் தற்போது போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

எனவே மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் உற்பத்தி தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்றை நடாத்துவதற்கும் ஜனாதிபதியை சந்தித்து குறித்த விடயம் தொடர்பாக கலந்துரையாட வாய்ப்பை ஏற்படுத்தி தருமாறு அவரிடம் கோரி இருந்தேன்.

குறித்த உரையாடலின் பலனாக நாளை வியாழக்கிழமை காலை 11.30 மணிக்கு முக்கிய பிரதிநிதிகளுடன் அரசாங்க அதிபர் தலைமையில் பாராளுமன்ற வளாகத்தில் குறித்த கூட்டம் இடம்பெற உள்ளது. ஜனாதிபதியும் குறித்த கூட்டத்தில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் உள்ளது.

குறித்த கலந்துரையாடல் இடம்பெறும் வரை எவ்வித நகர்வும் முன்னெடுக்கப்படாது என உரிய அமைச்சர் தெரிவித்துள்ளார்.

குறித்த கூட்டத்தில் இறுதி முடிவை எடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றது. என அவர் மேலும் தெரிவித்தார். (நி-285)

# குறைக்கப்படும் எம்பிக்களுக்கான காப்பீட்டு தொகை

## கிடைத்தது அனுமதி

(கொழும்பு)

ரூ.10 லட்சமாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான குழுக் காப்பீட்டு தொகையை, ரூ.2.5 லட்சமாக குறைக்கும் முன்மொழிவுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த திருத்தமானது, 2025 ஒக்டோபர் 9 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரவுள்ளது.

இது தொடர்பான முன்மொழிவானது, பொது பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபாலவால் முன்வைக்கப்பட்டது.

ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க முன்வைத்த வரவுசெலவுத் திட்ட பரிந்துரையின் படி, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் மற்றும் சிறப்பு நலன்களை கட்டுப்படுத்தும் நடவடிக்கையாக இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

2023 மே மாதத்தில் அறிமுகமான குழுக் காப்பீட்டு திட்டத்தின் கீழ், ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் ஆண்டுக்கு அதிகபட்சம் ரூ.10 லட்சம் வரை காப்பீடு வழங்கப்பட்டு வந்தது.

புதிய தீர்மானத்தின் படி, எதிர்வரும் காப்பீட்டு ஆண்டுக்கான வரம்பாக ரூ.2.5 லட்சம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இது 2025 ஒக்டோபரில் தொடங்கும் காப்பீட்டு வருடத்திற்கு பயன்படுத்தப்படும். (நி)


# INVITATION FOR BIDS 2025/07
# PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

1. The **Chairman, Divisional Procurement Committee** on behalf of the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of **building construction** for grade mentioned in the table below.
   **"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987 for the contracts exceed Rs.5 million," The certificate of registration (PCA 03) shall be submitted"**
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Document Issuing/Purchasing Period | | | | From 06.08.2025 until 18.08.2025 | | | | |
| | | Pre-Bid Conference | | | | At 10.30 A.M on 13.08.2025 | | | | |
| | | Closing and Opening of Bids | | | | At 10.30 A.M on 19.08.2025 | | | | |
| 01 | PSDG/TOURISM/NP/MU/PTKPS/2025/01 | Establishment of Additional Facilities at Katsilaimadhu Area | PSDG Tourism | 5.08 | 84 | C8 or Above (Building) | 2,000.00 | 3-Nov-2025 | 80,000.00 | 1-Dec-2025 |
| 02 | PSDG/TOURISM/NP/MU/PTKPS/2025/02 | Establishment of Additional Facilities at Katsilaimadhu Area Stage II | PSDG Tourism | 5.34 | 105 | C8 or Above (Building) | 2,000.00 | 3-Nov-2025 | 80,000.00 | 1-Dec-2025 |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:0212291024, email: pkips@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the **Chairman, Divisional Procurement Committee,Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** on or before **10.30 A.M** as stated in table above. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**
8. Pre-Bid Conference will be held at Conference Hall, **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** commencing at **10.30 AM** as stated in table above.
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Puthukkudiyiruppu Pradeshiya Sabha,**
**Paranthan Road,**
**Puthukkudiyiruppu.**
**06.08.2025**

(C-3576)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறந்த எண்ணம் கீழான எண்ணத்தை அடக்குகிறபோது மனிதன் தனக்குத்தானே தலைவன் ஆகிறான். – சாக்ரடீஸ்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

## எங்கள் வரலாற்றை நாமே எடுத்துரைப்போம்

ஆவணப்படுத்தலில் ஈழத் தமிழர்களாகிய நாம் படுதோல்வி கண்டுள்ளோம் என்பதைக் கூறித்தானாக வேண்டும்.

உண்மை. எங்களின் வரலாற்றை எழுதவும் எம் தலைமுறைக்கு அவற்றைக் கைமாற்றம் செய்யவும் நாம் பின்னடித்தமை காரணமாக எங்களின் இன்றைய நிலை துயரம் நிறைந்ததாகிவிட்டது.

இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும் எங்கள் வரலாற்றை எழுதுவது எங்களை நாங்களே தற்பெருமை கொண்டாடுவதாக அமைந்து விடும் என்ற சிறுமைத்தனமான நினைப்பு எங்களை பின்னடையச் செய்துவிட்டது.

எனவே நாம் விட்ட தவறை இனியும் விடக்கூடாது.

ஆம், எங்கள் தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய ஒவ்வொரு வரலாற்று இடங்களும் பேசப்பட வேண்டும்.

பொலநறுவைக்குச் சென்றால், பொலநறுவை தலைநகராக இருந்த வரலாறு சிறிய புத்தகமாக அச்சிடப்பட்டு அந்தப் புத்தகம் அங்கு விற்பனையாகிறது.

இதுபோல தென்னிலங்கையின் சுற்றுலாத்தளங்களுக்குச் சென்றால், அந்த இடத்தின் வரலாற்றுப் பின்னணி அடங்கிய புத்தகங்கள் மற்றும் புகைப்படங்கள் விற்பனையாகிக் கொண்டிருக்கும்.

ஆனால் எங்கள் யாழ்ப்பாணக் கோட்டை, மாவிட்டபுரம் மற்றும் கீரிமலை வரலாறு, நாகம் வழிபட்ட நயினாதீவு நாகபூசணி அம்மன், நல்லூர் மந்திரிமனை, யமுனா ஏரி, வல்லிபுரக் கோயில், சிங்கள மக்களால் ஔஷத லோகய என அழைக்கப்படும் நெடுந்தீவு, நல்லூர் முருகன் ஆலயச் சிறப்பு, சங்கிலியன் தோப்பு என எங்கள் வரலாற்று இடங்களை எழுதி,

அவற்றை சிறிய புத்தகங்களாக மும்மொழிகளில் அச்சிட்டு அவற்றை தென்னிலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் இங்கு வருகின்றவர்களுக்கு வழங்குகின்ற நடைமுறை எங்களிடம் இல்லாத காரணத்தால், எங்கள் வரலாற்றை நம் இளம் சந்ததியும் அறிய முடியவில்லை. ஏனையவர்களும் அறியக் கிடைக்கவில்லை.

எனவே இதுவிடயத்தில் நாம் விழிப்படைய வேண்டும். அதிலும் குறிப்பாக இங்கு வருகின்ற சிங்கள மக்கள் மற்றும் வெளிநாட்டவருக்கு எங்களின் வரலாற்றை எடுத்துக்கூற வேண்டும்.

இதற்கும் மேலாக, நல்லூர் முருகனின் ஆலயத்துக்கு வருகின்ற சிங்கள மாணவர்கள் மற்றும் வெளிநாட்டவர்களுக்கு எங்கள் நல்லூர்க் கந்தனின் வரலாற்றுச் சிறப்பை, ஆலய அமைப்பை, நல்லூர்க் கந்தனே தஞ்சமென வாழுகின்ற நம் மக்களின் பக்தி நிலையை எடுத்துக்கூற வேண்டும்.

இதற்கும் மேலாக, நல்லூருக்கு வருகின்ற வெளிநாட்டைச் சேர்ந்தவர்களை பண்புடைமையோடு நடத்துவதும் அதன்மூலம் தமிழர்களின் உயரிய பண்பாட்டை, அவர்கள் மனதால் உணரவைப்பதும் எங்களின் தலையாய கடமை என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது.

# தமிழினப் படுகொலைகளுக்கு நீதியான விசாரணை வேண்டும்

## சபையில் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன்

(கொழும்பு)

தமிழினப் படுகொலைகள். கட்டமைக்கப்பட்ட இனவழிப்புகளுக்கும் நீதி விசாரணை வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை பதவி நீக்கம் செய்வது தொடர்பான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

அரசாங்கத்தால் பொலிஸ் மா அதிபரான தேசபந்து தென்னகோனுக்கு எதிராக கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணையானது மிகப்பெரும் அநீதிக்கு எதிரானது. மக்கள் பட்ட துயரங்கள், அனுபவித்த சித்திரவதைகள், இங்கு நடந்த மனித குலத்திற்கு எதிரான குற்றங்களோடு சம்பந்தப்பட்ட ஒரு பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு எதிரானது என்பதனை நாம் ஏற்றுக்கொள்கின்றோம்.

செம்மணியில் நேற்று வரைக்கும் 130க்கு மேற்பட்ட மனித எலும்புக்கூட்டுத் தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன. 1ஆம் திகதி நான் செம்மணியை சென்று பார்வையிட்டேன். கடந்த திங்கட்கிழமை ஸ்கான் செய்யும் இயந்திரம் மூலம் சித்துப்பாத்தி மயானமும் அதனை அண்டிய பகுதிகளும் ஆய்வு செய்யப்பட்டது. இந்நிலையில் இங்கு இன்னும் பல எலும்புக்கூட்டு வயல்கள் இருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவ்வாறானால் இவ்வாறு தமிழர்களுடைய எலும்புக் கூட்டுத் தொகுதிகள் வெளிவரக் காரணமாக உள்ள கொலையாளிகள் யார்? இக்கொலைகளை யார் செய்தார்கள்? தேசபந்து தென்னகோனுக்கு எதிராக நீங்கள் கொண்டுவரவுள்ள நீதியை தமிழர்களுக்கு எதிராக செயற்பட்டவர்களுக்கு கொண்டுவர நீங்கள் தயார் இல்லை. அந்த தெளிவான மனநிலை உங்களிடம் இல்லை. இதில் ஒரு சர்வதேச மேற்பார்வையைகொண்டு வாருங்கள் என்று கேட்டால் கூட அரசு அதில் தெளிவில்லாத நிலையில் உள்ளது.

சர்வதேச விசாரணைக்கு சாட்சியமளிக்கத் தயார் கிருஷாந்தி குமாரசாமி வழக்கின் பிரதான குற்றவாளியான சோமரத்ன ராஜபக்ஷ அறிவித்துள்ளார். அவருடைய மனைவி ஜனாதிபதிக்கு கடிதம் என்ற செய்தி வந்துள்ளது. அவருடைய மனைவி ஜனாதிபதிக்கு, பிரதமருக்கு, நீதி அமைச்சருக்கு சிங்களத்தில் எழுதிய கிட்டத்தட்ட 6 பக்கங்களைக் கொண்ட கடிதத்தையும் சபாபீடத்திற்குச் சமர்ப்பிக்கின்றேன். அவர் குறிப்பிடுகின்றார் இங்கே நடந்த மிக மோசமான மனிதப்படு கொலைகளுக்கு சாட்சியமளிக்க சர்வதேச நீதிமன்றத்துக்கு வரத் தயார் என்கின்றார்.

சோமரத்ன ராஜபக்ஷ சட்டவிரோதமாக தண்டிக்கப்படுகின்றார். ஆகவே செம்மணி தொடர்பில் சர்வதேச விசாரணை ஒன்றை முன்னெடுக்க வேண்டும். அதில் நான் சாட்சியமளிக்க தயார் என எனது கணவர் தெரிவித்துள்ளார் என திருமதி விஜேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

எனவே தேசபந்து தென்னகோன் மட்டுமல்ல. இங்கு நடந்த தமிழினப் படுகொலைகள். கட்டமைக்கப்பட்ட இனவழிப்புகளுக்கும் நீதி விசாரணை வேண்டும். ஆகவே இந்த செம்மணி விவகாரத்தில் சோமரத்ன ராஜபக்ஷவை நீங்கள் சர்வதேச விசாரணைக்கு தயார்படுத்துங்கள். உண்மைகள் வெளியே வரட்டும். அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்பதை அறிவிக்க வேண்டும் என்றார். (ம-7)

## கலைஞனின் குரல் பத்திரிகை வெளியீடு

(பாஷையூர்)

கலைகள், கலைஞர்களின் படைப்புகளை வெளிக்கொணரும் புதியதோர் முயற்சியாக உருப்பெற்றுள்ள கலைஞனின் குரல் மாதப் பத்திரிகையின் வெளியீடானது இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு 2ஆம் குறுக்குத்தெரு பாஷையூரில் அமைந்துள்ள முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றப் பிராந்திய அலுவலகத்தில் இடம் பெறவுள்ளது. (ம-7)

# சபாநாயகர் - நாமல் ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் கடும் தர்க்கம்

(கொழும்பு)

நிலையியற் கட்டளை 98 இன் பிர காரம் நீதிமன்றத்தில் விவாதிக்கப்படும் வழக்கு தொடர்பான ஒரு விடயத்தை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குறிப்பிட்டதைத் தொடர்ந்து சபாநாயகருக்கும், நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை (05) நடைபெற்ற அமர்வின்போது ஒழுங்குப் பிரச் சினையை முன்வைத்த நாமல் ராஜபக்ஷ,

நிலையியற் கட்டளை 98 எப்பின் கீழ், நீதிமன்றத்தில் விவாதிக்கப்படும் வழக்கு தொடர்பான ஒரு விடயத்தை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியாது. தேசபந்து விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் 9 வழக்குகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. எனவே நீதிமன்ற வழக்கின் முடிவு பாராளுமன்ற விவாதத்தால் பாதிக்கப்படாது என்பதை சபாநாயகர் உறுதிப்படுத்த வேண்டும்.

எனவே, இது தொடர்பாக ஒரு அறிக்கையை வெளியிட்டு பின்னர் விவாதத்தை ஆரம்பியுங்கள் என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன, தொடர்புடைய விதிகளை ஆராய்ந்த பின்னரே, பாராளுமன்றத்தில் விவாதம் நடத்த நாள் ஒதுக்கப்பட்டது. இதனால் பிரேரணையை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள முடியும் என்றார்.

இதற்கு மறுப்பு தெரிவித்து எழுந்து உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ, தேசபந்து தென்னகோனை பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து நீக்கும் முன்மொழிவு மீதான விவாதத்தை நடத்துவதன் சட்டபூர்வத் தன்மை குறித்து தொடர்ந்தும் கேள்வி எழுப்பி, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதன்போது அரச தரப்பினர் சிலரும் நாமல் ராஜபக்ஷவுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். எனினும் சபாநாயகர் தான் ஒரு பதிலை வழங்கியுள்ளதாகவும் எனவே விவாதத்தை நடத்த முடியும் எனவும் கூறி விவாதத்தை ஆரம்பிக்குமாறு அரச தரப்பினரைப் பணித்தார். (ம-7)

## குளத்திலிருந்து ஆணொருவர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

லிந்துலை லோகி தோட்ட குளத்தில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உடப்புசலாவ பகுதியில் இருந்து தொழில் நிமிர்த்தம் தலவாக்கலை நகருக்கு வந்திருந்த இளைஞன் ஒருவரே மாலை சடலமாக மீட்கப்பட்டவராவார். (ம-7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் கணித பாட ஆசிரியர்
**திரு.வ.பாலமுரளி** அவர்களின்
அன்புத் தந்தையார்

## திரு. செல்லத்துரை வரதராஜா

தோற்றம்: 1946.08.23 மறைவு: 2025.08.05

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம்,
யா/புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்.
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(4983)

# பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

**இயக்கச்சி சந்தைக் கடைத் தொகுதியிலுள்ள கடை இல PS-09,VS-04 ஆகிய கடைகளை 01.09.2025 ஆம் திகதி தொடக்கம் 31.12.2025 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல் - 2025**

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி | :-06.08.2025 தொடக்கம் 19.08.2025 வரை(அலுவலக நேரம் ) |
| கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி | :-20.08.2025 பிற்பகல் 2 மணி |
| கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி | :-21.08.2025 பிற்பகல் 2 மணி |
| கேள்வி திறக்கப்படும் இடம் | :-பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, தலைமை அலுவலகம் |

**இயக்கச்சி சந்தைத்தொகுதி கடைகளுக்கான கேள்வி அட்டவணை**

| இல | கடை இலக்கம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கப்பட கூடியது) | கேள்விப்படிவ கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. | PS - 09 | 8400.00 | 1000.00 | 2,000.00 |
| 2. | VS - 04 | 6400.00 | 1000.00 | 2000.00 |

**நிபந்தனைகள் :-**

01. விண்ணப்பதாரி இலங்கை பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் பச்சிலைப்பள்ளி பிரதேசசபைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. கேள்விப்படிவம் பெறவிரும்புவோர் கோரிக்கை கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப் பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் அதன் பிரதியுடன் சமூக மளிக்கவேண்டும்.
03. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை **"தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை பளை"** என்னும் முக வரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக இட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும். இரண்டாவது பிரதியை **"பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணை யாளர் அலுவலகம், கிளிநொச்சி"** என்ற முகவரிக்கு 20.08.2025 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
04. ஒருவர் ஒரு கடைக்கு மாத்திரம் விண்ணப்பிக்க முடியும் என்பதுடன் ஏற்கனவே பிரதேசசபையின் அறைவாடகை கடைகளை நீண்டகால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்கமுடியாது.
05. அரச உத்தியோகத்தர்கள் கடைகளைப் பெற்றுக்கொள்ளமுடியாது.
06. கேள்விச்சித்திதாரராக தெரிவு செய்யப்படுவோர் கேள்வித்தொகையின் 1/3 பங்கு பணத்தை முழுமையாகச் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும். மிகுதித் தொகையினை 02 பகுதியாகப் பிரித்து ஒவ்வொரு மாதக்கட்டணமாக அடுத்த மாதம் 05 ஆம் திகதிக்குள் செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக்கொள்ளவேண்டும். தவறும் பட்சத்தில் அதற்கான மாதக்கட்டணத்துடன் மாதாந்தக் கட்டணத்தின் 10% தண்டமாக அறவிடப்படும் என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.
07. சித்திகரகுத்தகைதாரர் பச்சிலைப்பள்ளி பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைக்கிணங்க நடந்துகொள்ளல் வேண்டும்.
08. VS - 04 கடையானது மரக்கறி வியாபாரம் மற்றும் பழவியாபாரத்திற்காக மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது.
09. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
10. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் தவிசாளருக்கு உண்டு.
11. மேலதிக விபரங்களை பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திரு.சுப்பிரமணியம் சுரேன்,
தவிசாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை


(C-3577) 06.08.2025




மாலை நிகழ்வுகள்
6.00 மணிக்கு அகில இந்திய குணாத்கயசமிதி சென்டைமேளத்துடன் வயலின் கச்சேரி நடைபெறும். 08.30 மணிக்கு விஹா நாட்டியா குழுவினரின் பரத நாட்டிய நடனம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 8.30 மணிக்கு எம்பெருமான் 25 சென்டை மேளங்கள், பண்டைய சிலம்பாட்டம், இலங் கை யில் புகழ் பூத்த மயில் நடனம், யானை, சேனை படை சூள முத்துச் சப்பரத்தில் வீதியுலா வருவார்.
10.00. இலங்கையின் புகழ் பூத்த சு.ஏ வாசனின் சாரங்கா இசைக்குழுவுடன் A.R ரகுமானின் இசையில் பாடிய Airtel Super Singer பாடகியுமாகிய நேகா மற்றும் Zee Tamil சரிகமபா புகழ் குத்ரேஸ் மற்றும் தக்சித் இணைந்து வழங்கும் "வணக்கம் கருணையம்பதி" இசைச் சங்கமம் இடம்பெறும்.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றார்கள். (பூங்காவனம்)7ம் திருவிழா

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 - 12 - 1980 | 05 - 08 - 2025 |



## கந்தசாமி புவிதரன் (புவி)

சாரையடி புலோலி தெற்கு, புலோலியைச் சேர்ந்த கந்தசாமி புவிதரன் (புவி) அவர்கள் நேற்று (05.08.2025) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பொ.கந்தசாமி - காலஞ்சென்ற பூரணம் (லக்கணம்) தம்பதியரின் புதல்வனும் துவாபரன் (பரன் - கனடா), மோகனதாஸ் (மோகன் - ஜேர்மனி), நவீந்திரன் (நவி - இலங்கை), குகநேசன் (நேசன் - சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் துஸ்யந்தினி, பவானி, மௌனிகா ஆகியோரின் மைத்துனரும் தர்மிகா, தாருகா, தனுஷாந் ஆகியோரின் சிறிய தந்தையும் க.மகேஸ்வரி அவர்களின் மருமகனும் சிவகுருநாதன் அவர்களின் ஒன்று விட்ட சகோதரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக புலோலி ஆனைவிழுந்தான் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சாரையடி,
புலோலி தெற்கு.

(1416)

தகவல் : குடும்பத்தினர்
077 500 2162, 021 226 3898

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணியில்...

பிற்பகல் 2 மணிவரை குறித்த ஸ்கான் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

நேற்று முன்தினம் செம்மணி வளாகத்தில் முன்னெடுக்கப்பட்ட ஸ்கான் பரிசோதனையில் மேலும் பல மனித எச்சங்கள் இனங்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## பழிவாங்கும்...

செய்வது குறித்து ஊடகவியலாளர்கள் நேற்று மகிந்தவிடம் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இதற்குப் பதிலளிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

நாட்டில் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து தாம் கருத்து வெளியிடப் போவதில்லை எனவும் தம்மிடம் பழைமையான கருத்துக்களே உள்ளதாகவும் இளம் அரசியல்வாதிகளே நாட்டின் அரசியல் நிலைமை பற்றிப் பேச வேண்டுமென தெரிவித்துள்ளார்.

மக்கள் அளித்த சிறப்புரிமைகளே காணப்படுவதாகவும் அரசாங்கம் சிறப்புரிமைகளை இரத்துச் செய்வது குறித்து கவலையில்லை எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

## சங்குப்பிட்டியில்...

யாழ். நோக்கி வந்துகொண்டிருந்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து சங்குப்பிட்டிப் பாலத்துக்கு அருகில் கடலுக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யாழில் இருந்து கிளிநொச்சிக்கு சென்று, மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்தபோது இந்த விபத்து சம்பவித்துள்ளது.

விபத்து இடம்பெறும்போது காரினுள் மூன்று இளைஞர்கள் இருந்தபோதும் எவரும் காயங்களுக்கு உள்ளாகவில்லை. நீண்ட முயற்சியின் பின்னர் கார் கடலில் இருந்து மீட்கப்பட்டது. (ம-7,104)

## சட்டச் சிக்கல்...

துள்ளார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மாகாணசபை தேர்தல்கள் தொடர்பாக அரசியல் அமைப்பு ரீதியில் ஏற்பாடு காணப்பட்டு இருப்பினும் எல்லை நிர்ணயம் தொடர்பாக பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த போதும் அதற்கு இன்றுவரை பாராளுமன்றத்தின் அனுமதி கிடைக்கவில்லை. எனவே மாகாணசபை தேர்தல்களை நடத்துவதில் சட்ட சிக்கல் காணப்படுகின்றது. அந்த சட்டச் சிக்கல் நீக்கப்படும்போது தேர்தல் ஆணைக்குழுவானது மாகாண சபை தேர்தலை நடத்த எந்த சந்தர்ப்பத்திலும் தயாராக இருக்கின்றது என தேர்தல் ஆணைக்குழு பணிப்பாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7)

## கிளிநொச்சி...

கடமையாற்றி வந்த நிலையில் அரசாங்க அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 6 எலும்புக்...

6 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு ஏற்கெனவே இனங்காணப்பட்ட 4 எலும்புக்கூட்டுத் தொகுதி முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை செம்மணியில் இதுவரை 141 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு 130 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,33)

## தேசபந்து...

வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

யோசனைக்கு ஆதரவாக 177 வாக்குகள் பதிவாகியிருந்ததுடன், எதிராக எவரும் வாக்களிக்கவில்லை.

உறுப்பினர் ஒருவர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

2002ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க அதிகாரிகளைப் பதவி நீக்கும் சட்டத்தின் 17ஆவது பிரிவுக்கு அமைய தேசபந்து தென்னகோனை பதவி நீக்குவதற்காக முன்வைக்கப்பட்ட யோசனை பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அறிவித்தார். (ம-7)

## ஸ்கான்...

தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

செம்மணிப் புதைகுழி வளாகத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் பரிசோதனையில் மேலும் பல மனித எச்சங்கள் இனங்காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## காட்சிப்படுத்த...

தெரிவித்துள்ளார்.

செம்மணிப் புதைகுழி தொடர்பில் ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

செம்மணியில் தனி மனிதனோடு தொடர்புடைய சான்றுப் பொருட்களே காட்சிப்படுத்தப்பட்டது.

இனிவரும் காலங்களிலும் செம்மணி மனிதப் புதைகுழியில் தனி மனிதனோடு தொடர்புடைய சான்றுப் பொருட்கள் மீட்கப்பட்டால் அவற்றையும் காட்சிப் படுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என்றார். (ம-7,33)

## மக்...

யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை அகழ்ந்தெடுக்கப்பட்ட ஆடைகள் உள்ளிட்ட 54 சான்றுப் பொருட்கள்நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் 1.30 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் குறித்த சான்றுப் பொருட்கள் நீதிமன்ற காவலுடன் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த நிலையில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் மற்றும் பொது மக்கள் அவற்றை பார்வையிட்டிருந்தனர்.

குறித்த சான்றுப் பொருட்களில் குழந்தைகளின் பொம்மை, குழந்தை ஒன்றின் பால் போச்சி, குழந்தைகளின் காலணிகள், புத்தகப்பை, கண்ணாடி வளையல்கள் உள்ளிட்ட 54 சான்றுப் பொருட்கள் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

சான்றுப் பொருட்களை மக்கள் பார்வையிட மதியம் 1.30 மணிக்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், புதைகுழி அகழ்வு பணிகள் மதியத்துடன் இடைநிறுத்தப்பட்டிருந்தன.

அதேவேளை செம்மணி பகுதியில் மேலதிக பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு, பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்ததுடன், சான்றுப் பொருட்களையோ, அவற்றை பார்வையிட வருவோரையோ, செம்மணிப் புதைகுழி காணப்படும் சுற்றுவட்டார பகுதிகளில் ஊடகங்கள் உள்ளிட்ட எவருக்கும் புகைப்படங்கள் மற்றும் காணொளி பதிவுகளை மேற்கொள்ள தடை விதிக்கப்பட்டிருந்தது.

சுமார் 200 பேர்வரை சான்றுப் பொருட்களை பார்வையிட்டிருந்தனர். எனினும் எவரும் அவற்றை அடையாளம் காட்டவில்லை. (ம-7,33)

மஹஜன சம்பத
திகதி 2025.08.05 சீட்டிழுப்பு இலக்கம் 5912
D 5 3 0 9 2 8
அத சம்பத D 0 9 2 8 சீட்டிழுப்பு இலக்கம் 487
National Lotteries Board

சுப தவசக் திகதி 2025.08.05 சீட்டிழுப்பு இலக்கம் 0028
கன்னி 02 35 52 53

தன நிதானய
திகதி - 2025.08.05 சீட்டிழுப்பு இலக்கம் - 1942
N 02 34 41 61 N
Double Chance 18011

மெகா பவர்
திகதி 05/08/2025 சீட்டிழுப்பு இலக்கம் 2260
A 03 22 28 32 74

ஜய திகதி 2025.08.05 சீட்டிழுப்பு இலக்கம் 0180
N 3 2 8 4

கொவிசெத சீட்டிழுப்பு இலக்கம் 4154 சீட்டிழுப்பு திகதி 05.08.2025
F 19 33 39 67
F

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.05 சீட்டிழுப்பு இலக்கம் 1221
மகரம் 13 24 51 55 மகரம்
07785

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.08.2025 வெற்றி வாரம் 0620
W 3 0 8 4 6 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.21,355,072.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2886 சீட்டிழுப்பு திகதி 2025.08.05 தினம் செவ்வாய்க்கிழமை
01 08 43 76 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,583,891.20

சனிதா
திகதி 05.08.2025 வெற்றி வாரம் 5047
24 32 49 54 K
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,988,610.80

சசிரி
வெற்றி வாரம் 741 சீட்டிழுப்பு திகதி 05.08.2025 செவ்வாய்க்கிழமை
03 27 30
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4598 சீட்டிழுப்பு திகதி 05.08.2025 தினம் செவ்வாய்க்கிழமை
09 17 27 43 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.7,716,196.00

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 31 19 41 54 63
2062 05.08.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.586,223,681.80

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை வெற்றி வாரம்: 2712 சீட்டிழுப்பு திகதி: 2025.08.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.79,062,057.60
20 21 46 52 F

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3582)

**076 825 7716** (ஆகாஸ்)

## மணப்பெண் தேவை

01. யாழ்ப்பாணம், இந்து, 1985, ரேவதி, Computer Engineer, Germany Citizen,Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 31625
02. வட்டுக்கோட்டை, இந்து, 1983, கேட்டை, Charted Accountant, Australia Citizen,Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 24770
03. கோப்பாய், இந்து, 1984, சதயம், MBBS Doctor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32160
04. திருநெல்வேலி, இந்து, 1990, விசாகம், MBBS Doctor,UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.32016
05. கரவெட்டி, இந்து, 1986, அத்தம்,Graduate, Quantity Surveyor, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 29720
06. மீசாலை, இந்து, 1988, சதயம், MSC Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 29216
07. கொழும்புத்துறை,Romancatholic, 1993, அத்தம், MSC, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 32886
08. ஊர்காவற்றுறை, Romancatholic, 1991, Administration Accounting, Working in Royal Bank Of Canada, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 28799
09. கந்தர்மடம், இந்து, 1989, உத்தராடம், MSC, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.
10. கைதடி - வரணி, இந்து, 1994, கார்த்திகை, Hons in Phsycology Goverment Job,Divorce,Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. 51091

எம்மிடம் எல்லா நாட்டிலும், எல்லா ஜாதியிலும் Unmarried, Divorce மாப்பிள்ளைகளும் மணப்பெண்களும் உண்டு. (C-3585)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728

## ரூபாவின் பெறுமதி மேலும் வீழ்ச்சி

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று மேலும் அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது.

அந்தவகையில் இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்டுள்ள நாணயமாற்று விகிதங்களின் படி,

அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 297 ரூபாய் 21 சதம், விற்பனைப் பெறுமதி 304 ரூபாய் 71 சதம்.

ஸ்ரேலிங் பவுண்ட் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 393 ரூபாய் 29 சதம், விற்பனைப் பெறுமதி 406 ரூபாய் 26 சதம்.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி 341 ரூபாய் 78 சதம், விற்பனைப் பெறுமதி 353 ரூபாய் 81 சதம் ஆகும். (ம-7)

A/L - 2027 புவியியல்

N.BABU (சனி, ஞாயிறு 9 a.m- 10 am)

- ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படும்.
- புதிய அனுமதிகள் வழங்கப்படும்.
- தனிப்பாட அனுமதி உண்டு.

(C-35578)

DMI ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்

**077 936 5087**

## காணி விற்பனைக்கு

- சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள தனங்களப்பு சந்திக்கு அண்மையில் தென்னை மரங்கள் உள்ள காணித் துண்டுகள் விற்பனைக்கு உள்ளன.
- வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உள்ளது.

(4970)

**077 172 1074**

## கனடா - வரி இல்லாமல் விரைவு பொதிகள் சேவை

| | |
|---|---|
| 5-9 Kg | 3710/- |
| 11-16 Kg | 2660/- |
| 21-27 Kg | 2480/- |

- குறைந்த விலை -நிறைந்த சேவை
- கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
- 14 நாட்களில் Delivery

(C-3581)

UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2480/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2270/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 / 076 822 6237

## வீட்டுப் பணிப்பெண் தேவை

யாழ். நகரில் 5 பேரைக் கொண்ட குடும்பம் ஒன்றில் தங்கி நின்று வேலை செய்யக் கூடிய பணிப்பெண் தேவை.

- சம்பளம் 60,000/-
- உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
- வயதெல்லை 33 - 55

(4985)

தொடர்புகளுக்கு :
**075 498 5400, 077 937 0000**
**021 221 7600**

## மொறாயஸ்

மொறாயஸ் பல்,மூக்கு கண்ணாடி அகம் ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி தற்போது 334 மணிக்கூட்டு கோபுர வீதியில் இயங்கி வருகிறது. வெலிங்டன் சந்தி (keells முன்பாக)மிகக் குறைந்த விலையில் மூக்கு கண்ணாடி வழங்கப்படும்.

(ஸ்தாபிதம் 1972 தொடக்கம் இதே இடத்தில் இயங்கியது) (1413)

தொடர்புகளுக்கு
**077 484 5379 /021 222 7893**

## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**
No.139, Main Street, Jaffna.
யாழ்.நீதிமன்றத்துக்கு அருகாமையில்
(முன்பதிவு செய்து வரவும்) (4984)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எங்கள் மதிப்பிற்கினிய ஆசான்
**திரு. வி. எஸ்.குணசீலன் அவர்கள்**

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக் குழுவினரின் 2025ஆம் ஆண்டிற்கான "யாழ்விருது" பெறுவதையொட்டி எமது மட்டற்ற மகிழ்வைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் அன்பு ஆசான் முருகன் திருவருளால் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு எய்தப் பிரார்த்தனை செய்கிறோம்.

வாழ்த்துவோர்:-
Best Wishes!
(C-3579) ஆசானின் அன்பிற்குரிய மாணவர்கள்

## பணியாளர் தேவை

சாவகச்சேரியில் உள்ள யாட் (கட்டடப்பொருள் விற்பனை நிலையம்) ஒன்றிற்கு கீழ்வரும் வேலைகளுக்குரிய பணியாளர்கள் தேவை.

- மெசின் கல்லு அடிப்பவர்
- ரக்ரரில் பொருள் ஏற்றி இறக்குபவர்
- ரக்ரர் (உழவு இயந்திரம்) றைவர்

(1417)

தொடர்பு : **077 940 0963**




இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org